# வருடாந்த அறிக்கை - 2019

---

குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை

இலக்கம் 428/11ஏ, முதலாவது மாடி, டென்ஸில்
கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல.
தொலைபேசி இலக்கம்: +94112879539
தொலைநகல் இலக்கம்: +94112879540
மின்னஞ்சல் முகவரி: witness.protection.srilanka@gmail.com

# உள்ளடக்கம்


- தலைவரின் செய்தி 03-04
- பணிப்பாளர் நாயகத்தின் செய்தி 05-06
- தூரநோக்கு மற்றும் செயற்பணி 07
- நிறைவேற்று சுருக்கம் 08-11
- அறிமுகம் 12-13
- குறிக்கோள்கள் 14
- குற்றத்தால் பலியானவர்களினதும் மற்றும் சாட்சியாளர்களினதும் 15
    - உரிமைகளும் மற்றும் உரித்துக்களும் 16
- அதிகார சபையின் தொழிற்பாடுகளும் மற்றும் கரும பணிகளும் 17
- பொலிஸ் உதவி மற்றும் பாதுகாப்புப் பிரிவு 18-23
- முகாமைத்துவ சபை - 2019 24-25
- பதவியணி பற்றிய விபரம் - 2019 26-28
    - ✓ சிரேஷ்ட முகாமைத்துவ சபை
    - ✓ துணைப் பதவியணி ஊழியர்கள்
    - முகாமைத்துவ உதவியாளர்கள்(தொழில் நுட்பம் சாரா)
    - சாரதிகள்
    - அலுவலக உதவியாட்கள்
    - பதவியணி ஊழியர்கள் பற்றிய விபரம்
- செயலாற்றுகை பற்றிய அறிக்கை 29-70
- நிதி முன்னேற்றம் (இறுதிக் கணக்குகள்) 71-94
- கணக்காய்வு அறிக்கை 95-100

## தலைவரின் செய்தி



குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் நீதியை பெற்றுக் கொடுக்கும் பொறிமுறைக்கு பங்களிக்கும் போது குற்றத்தால் பலியானவர்களும் மற்றும் சாட்சியாளர்களும் மறுபடியும் பாதிப்புக்கு ஆளாக்கப்படுதல், குற்றவாளிகளினால் ஏற்படுத்தப்படும் அழுத்தம், பாதிப்புகள், அச்சுறுத்தல்கள் என்பவற்றின் காரணமாக அவர்களின் உரிமைகளும் மற்றும் உரித்துக்களும் மீறப்படுகின்றன. இத்தகைய மீறல்களிலிருந்து அவர்களை பாதுகாப்பதற்கு முறையான ஒரு வேலைத் திட்டத்தின் தேவையின் மீது 2005 ஆம் ஆண்டு முதல் இலங்கையிலும் மற்றும் சர்வதேச ரீதியிலும் கவனம் செலுத்தப்பட்டமை ஒரு விஷேடத்துவமாகும். இந்த சகல கரும பணிகளினதும் பயனாக 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் திகதி 2015 இன் 04 ஆம் இலக்க குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் உதவுவதற்கும் மற்றும் அவர்களை பாதுகாப்பதற்குமான சட்டம் பாராளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டமையை நான் இலங்கை வரலாற்றில் முக்கியமான திருப்புமுனையாக கருதுகின்றேன்.

இவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்ட குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் உதவுவதற்கும் மற்றும் அவர்களை பாதுகாப்பதற்குமான சட்டத்தின் பிரகாரம், 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 08 ஆம் திகதி எமது இந்த அதிகார சபை ஆரம்பிக்கப்பட்டது. இந்த அதிகார சபை 2016 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி முதல் செயல்வலுப் பெறும் வகையில் நீதி அமைச்சரது அமைச்சின் கீழ் இயங்கும் ஒரு நிறுவனமாக 1967/8 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானியின் மூலம் தாபிக்கப்பட்டது.

குறித்த இந்த சட்டத்தின் பிரகாரம் குறித்தொதுக்கப்பட்டுள்ள தொழிற்பாடுகளையும் மற்றும் கரும பணிகளையும் நிறைவேற்றும் பொருட்டு தாபிப்பு பெற்ற எமது இந்த அதிகார சபையும் மற்றும் குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் உதவுவதற்கும் மற்றும் அவர்களை பாதுகாப்பதற்குமான பிரிவும் ஏற்கெனவே மிகவும் காத்திரமான முறையில் தொழிற்பட்டு வருகின்றன. முதல் கட்டத்தில் அதாவது 2016 ஆம் மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் புதிய ஒரு நிறுவனமாக தாபிப்பு பெற்ற எமது இந்த அதிகார சபையை 2018 ஆம் மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் எமது சேவைகளை வினைத் திறன் வாய்ந்ததாகவும் மற்றும் பயனுள்ளதாகவும் நிறைவேற்றக் கூடிய வகையில் ஒரு அடித்தளத்தை இடுவதற்கு முடிந்தமையை நான் எமக்கு கிடைத்த ஒரு பாக்கியமாக கருதுகின்றேன்.

இந்தப் புதிய சட்டத்தினால் எதிர்பார்க்கப்படுகின்ற தொழிற்பாடுகளையும் மற்றும் கரும பணிகளையும் நிறைவேற்றும் பொருட்டு தாபிப்பு பெற்ற குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய

அதிகார சபை மற்றும் குற்றத்தால் பலியானவர்களுக்கு உதவுவதற்கும் மற்றும் அவர்களை பாதுகாப்பதற்குமான பிரிவு ஆகியன ஏற்கெனவே மிகவும் துல்லியமாக செயல்பட்டு வருகின்றன. மேலும், இத்தகைய விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை நாடளாவிய ரீதியில் மேற்கொள்வதற்கும் மற்றும் நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கும் என ஐக்கிய நாடுகள் அமைப்பின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் வழங்கிய நிதி உதவியையும் நான் இங்கு பெரிதும் மதித்து நன்றிகூற கடமைப்பட்டுள்ளேன். அதே போலவே எமது அதிகார சபையின் கட்டமைப்பு சார்ந்த சூழலை உருவாக்குவதற்கும் மற்றும் பேணிச் செல்வதற்கும் என நல்கப்படும் அரச பங்களிப்பையும் நான் மிகவும் மகிழ்ச்சியுடன் நினைவுகூற விரும்புகின்றேன்.

எமது இந்த தேசிய அதிகார சபை குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாக்கும் பொருட்டு முற்றிலும் உதவுகின்ற தென் கிழக்கு ஆசியாவில் காணப்படும் ஒரேயொரு நிறுவனமாக விளங்குவதும் அதே போல் சர்வதேச ரீதியில் எமக்கு கிடைத்த நன் மதிப்பும் நாம் அடைந்த விஷேட வெற்றியாகும் என பெரும் மகிழ்ச்சியுடன் கூற விரும்புகின்றேன். இந்த எமது அதிகார சபையை குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்குரிய தெற்காசியாவில் மிகச் சிறந்த ஒரு நிறுவனமாக ஆக்குவதே எனது ஒட்டுமொத்த குறிக்கோளாகும்.

குற்றத்தால் பாலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான ஓர் நாடாக இலங்கையை கட்டியெழுப்பும் நோக்கில், குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான இந்த தேசிய அதிகார சபை பயணிக்கின்ற தனது பணயத்தில் அணிதிரண்டுள்ள முகாமைத்துவ சபை உறுப்பினர்கள், பணிப்பாளர் நாயகம் அடங்கலாக இந்த சபையினது ஊழியர்களையும் மிகவும் கௌரவத்துடன் நினைவு கூறுவதோடு, 2019 ஆண்டிற்கான வருடாந்த அறிக்கைக்கு இந்த செய்தியை விடுக்க எனக்கு கிடைத்தமையை நான் பெரும் பாக்கியம் எனவும் கருதுகின்றேன்.

சுகத கே. கமலத்
தலைவர்

## பணிப்பாளர் நாயகத்தின் செய்தி



குற்றத்தால் பாலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபையின் வருடாந்த அறிக்கைக்கு இந்த குறுகிய செய்தியை விடுப்பதில் நான் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். 2019 ஆம் ஆண்டில் இந்த அதிகார சபையின் முக்கிய குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் இலக்குக்கு உயிரூட்டும் பொருட்டு இந்த சந்தர்ப்பத்தை ஒரு விஷேட சந்தர்ப்பமாக ஆக்கிக் கொள்கின்றேன்.

2015 இன் 04 ஆம் இலக்க குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் உதவுவதற்கும் மற்றும் அவர்களை பாதுகாப்பதற்குமான சட்டத்தை நடைமுறைப்படுத்தி குற்றத்தால் பாலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 8 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதையடுத்து கடந்த குறுகிய காலப் பகுதியினுள் கணிசமான முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது என்பதை கூற வேண்டியுள்ளது. 2018 ஆம் ஆண்டில் 31 எண்ணிக்கையாக இருந்த எமது அதிகார சபையினது பதவியணி ஊழியர்களின் எண்ணிக்கையை 2019 ஆம் ஆண்டாகும் போது 38 வரை அதிகரிக்க முடிந்தது. அதாவது இரண்டு சட்ட அலுவலர்கள், ஒரு உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர், ஐந்து விசாரணை உத்தியோகத்தர்கள், ஒரு தகவல் உத்தியோகத்தர் மற்றும் ஒரு மொழிபெயர்ப்பாளர் என பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டது. இவ்வாறு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டமை இந்த அதிகார சபையின் குறிக்கோள்களை அடையும் கரும விடயங்களுக்கு துணையாக அமைந்துள்ளது.

2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் எமது அதிகார சபைக்கு முறையே 49 எண்ணிக்கையான முறைப்பாடுகளும் மற்றும் 86 எண்ணிக்கையான முறைப்பாடுகளும் கிடைத்திருந்தன. 2019 ஆம் ஆண்டினுள் அத்தகைய முறைப்பாடுகளின் எண்ணிக்கை 252 வரை அதிகரித்துள்ளது. இந்த எண்ணிக்கை 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மூன்று மடங்குகளாக காணப்படுகின்றது. எமது அதிகார சபை நாட்டின் சகல மாகாணங்களும் உள்ளடங்கும் வகையில் முன்னெடுத்த பிரசார நிகழ்ச்சித் திட்டங்களின் வெற்றி இதன் மூலமாக பிரதிபலிக்கப்படுகின்றது. மேலும்1985 என்ற இலக்கத்தின் ஊடாக இந்த அதிகார சபையுடன் தொடர்புகொள்ளக் கூடிய தொலைபேசி வசதியை அறிமுகப்படுத்தி ஊக்குவித்ததன் மூலமாக 2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில் 1,330 எண்ணிக்கையான தொலைபேசி அழைப்புகள் கிடைத்தமை குறிப்பிடத்தக்க ஒரு அம்சமாகும்.

2018 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் (UNDP) நிதியிலிருந்து கிடைத்த 40 மில்லியன் ரூபா மானியத்தில் எஞ்சிய 13.2 மில்லியன் ரூபா நிதி எமது அதிகார சபைக்கு பொருத்தமான சட்டத்தை நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகளுக்கு நேரடியாக பங்களிக்கும் தரப்புகளுக்கான 13 நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதற்காகவும் மற்றும் நாட்டில் பல பிரதேசங்களை உள்ளடக்கி பொது மக்களை விழிப்பூட்டும் பிரசார நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதற்காகவும் பயன்படுத்தப்பட்டது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் சிறுவர் நிதியம் (Unicef), ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (UNDP), தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, ட்ரான்ஸ்பேரென்ஸி இன்டர்நெஷனல் (Transparency International) நிறுவனம், சட்டமா அதிபரின் திணைக்களம், கல்வி அமைச்சு, பொலிஸ் திணைக்களம் போன்ற உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து செயல்பட்டதன் ஊடாக எமது அதிகார சபையினால் தனது அபிலாஷைகளை அடைந்து கொள்ள முடிந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.

குற்றத்தால் பலியானவர்களும் மற்றும் சாட்சியாளர்களும் அச்சமின்ற தமது உரிமைகளை பாதுகாத்து சட்டத்தின் இறைமை உறுதிசெய்யப்படும் வகையில் சமூகப் பொறுப்பை நிறைவேற்றும் பொருட்டு தேவையான பாதுகாப்பையும் மற்றும் உதவியையும் பெற்றுக் கொடுப்பதன் மூலம் ஒரு ஜனநாயக சமூகத்தின் சிறப்பம்சத்தை மேம்படுத்துவது எமது அதிகார சபையின் எதிர்பார்ப்பாகும். அந்த நோக்கத்தின் நிமித்தம் உச்சளவான பங்களிப்பை நல்குவதற்கு நாம் எதிர்காலத்திலும் அர்ப்பணிப்புடன் செயல்படுவோம் என்பதை இங்கு விஷேடமாக குறிப்பிடுவதற்கு விரும்புகின்றோம்.

உதயகுமார அமரசிங்க
பணிப்பாளர் நாயகம்

## தூரநோக்கு

குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான ஒரு நாடாக இலங்கையை கட்டியெழுப்புதல்

## செயற்பணி

குற்றத்தால் பலியானவர்களினதும் மற்றும் சாட்சியாளர்களினதும் உரிமைகளையும் மற்றும் உரித்துக்களையும் பாதுகாத்தல், அவற்றை ஊக்குவித்தல், செயல் வலுப்பெறச் செய்தல் மற்றும் செயற்படுத்துதல்

# நிறைவேற்று சுருக்கம்

2015 இன் 04 ஆம் இலக்க குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் உதவுவதற்கும் மற்றும் அவர்களை பாதுகாப்பதற்குமான சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதையடுத்து 2016 ஆம் ஆண்டு முதல் குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான இந்த தேசிய அதிகார சபை பத்தரமுல்ல, டென்சில் கொப்பேகடுவ மாவத்தையில் அமைந்துள்ள 428/11 ஆம் இலக்க கட்டிடத்தின் முதலாம் மாடியில் தாபிக்கப்பட்டுள்ளது. உத்தியோகபூர்வமாக நியமிக்கப்படும் ஏழு (7) உறுப்பினர்களும் மற்றும் மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்கள் நியமிக்கும் ஐந்து உறுப்பினர்களும் இந்த அதிகார சபையின் முகாமைத்துவ சபையில் அடங்குகின்றனர். மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களினால் ஜனாதிபதி சட்டத்தரனி சுகத கே. கமலத் அவர்கள் இந்த அதிகார சபையின் தலைவராக நியமிக்கப்பட்டார்கள். குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் உதவுவதற்கும் மற்றும் அவர்களை பாதுகாப்பதற்குமான சட்டத்தின் குறிக்கோள்கள் குறித்த சட்டத்தின் (2) ஆம் பிரிவிலும், குற்றத்தால் பலியானவர்களின் உரிமைகள் பற்றிய சட்டத்தின் (3) ஆம் பிரிவிலும், குற்றத்தால் பலியானவர்களின் உரிமைகள் மற்றும் உரித்துக்கள் பற்றிய சட்டத்தின் (4) ஆம் பிரிவிலும், சாட்சியாளர்களின் உரிமைகள் பற்றிய சட்டத்தின் (5) ஆம் பிரிவிலும், தகவல் வழங்கும் நபர்களின் உரிமைகள் பற்றிய சட்டத்தின் (6) ஆம் பிரிவிலும், இந்த தேசிய அதிகார சபையின் தொழிற்பாடுகளும் மற்றும் கரும பணிகளும் பற்றிய சட்டத்தின் (13) ஆம் பிரிவிலும் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளன. அத்தகைய குறிக்கோள்கள் தெளிவாக இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த தேசிய அதிகார சபைக்கு அனுமதிக்கப்பட்டுள்ள 54 ஊழியர்களுடைய பதவியணிக்கு 2018 ஆம் ஆண்டளவில் 31 அலுவலர்கள் ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்டனர். 2019 ஆம் ஆண்டளவில் இந்த பதவியணியின் எண்ணிக்கை 38 வரை அதிகரிக்கப்பட்டது. இதன் போது இரண்டு சட்ட அலுவலர்கள், ஒரு உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர், ஐந்து விசாரணை உத்தியோகத்தர்கள், ஒரு தகவல் உத்தியோகத்தர் மற்றும் ஒரு மொழிபெயர்ப்பாளர் என பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டது. 2019 ஆம் ஆண்டில் 20 முகாமைத்துவ சபை கூட்டங்களை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இந்த அதிகார சபைக்கு 252 எண்ணிக்கையான முறைப்பாடுகள் கிடைத்திருந்தன. கிடைத்த இந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கையை 2018 ஆம் ஆண்டில் கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது அது மூன்று மடங்குகள் அதிகமானதாகும். கிடைத்த அந்த 252 எண்ணிக்கையான முறைப்பாடுகளில் 61 எண்ணிக்கையான முறைப்பாடுகள் விசாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளன. இதன் போது நீதிமன்றங்கள் அனுப்பி வைத்த வேண்டுகோள்களுக்கு விஷேட கவனம் செலுத்தப்பட்டது. 05 முறைப்பாடுகள் ஏனைய நிறுவனங்களுக்கு குறிப்பீடு செய்யப்பட்டன. மேலும் குறித்த அந்த காலப் பகுதியில் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்த 14 முறைப்பாடுகளும், விசாரணை செய்யப்பட்டு வருகின்ற 166 முறைப்பாடுகளும், மூடப்பட்டிருந்த 03 முறைப்பாடுகளும் இந்த முறைப்பாடுகளில் அடங்குகின்றன.

2015 இன் 4 ஆம் இலக்க குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் உதவுவதற்கும் மற்றும் அவர்களை பாதுகாப்பதற்குமான சட்டத்தின் 24 (1) ஆம் பிரிவின் பிரகாரம் நீதிமன்றங்களிலிருந்தும் மற்றும் நீதி சேவைகள் ஆணைக்குழுவிலிருந்தும் 11 கட்டளைகள் இந்த அதிகார சபைக்கு கிடைத்திருந்தன. அந்த ஒவ்வொரு கட்டளை தொடர்பாகவும் பாதுகாப்பை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மேலும் குறித்த சட்டத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அதிகார சபையின் பாதுகாப்பு நிதியம் தாபிக்கப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதிற்கு இந்த அதிகார சபையின் நிதி ஆற்றல் 3.9 மில்லியன் ரூபா வரை அதிகரித்துள்ளது. குறித்த சட்டத்தின் 4(1) ஆம் பிரிவின் பிரகாரம் நீதிமன்ற அல்லது அரை நீதிமன்ற நடவடிக்கைகளில் பங்குபற்றுவதற்காக நீதிமன்றங்களுக்கு செல்லும் போது உணவு, தங்குமிடவசதிகள் மற்றும் போக்குவரத்து வசதிகள் முதலியவற்றுக்கு செலவாகும் செலவுகளை இந்த அதிகார சபையினது பாதுகாப்பு நிதியத்தின் நிதியிலிருந்து செலுத்துமாறு நீதிமன்றங்களிலிருந்து விடுக்கப்படும் வேண்டுகோள்கள் கிடைக்கும் போது ஆகக்கூடியது ஐயாயிரம் ரூபா என்ற உச்சளவினுள் அந்த செலவுகளை செலுத்துவதற்கு 2019.11.15 ஆம் திகதி நடைபெற்ற இந்த அதிகார சபையின் முகாமைத்துவ சபை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. 2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில் அத்தகைய 2 வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டிருந்தன. ஒரு வேண்டுகோள் தொடர்பாக இந்த வருடத்திலேயே நிதி பெற்றுக் கொடுக்கப்பட்டது.

2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் இந்த அதிகார சபையுடன் உடனக்குடன் தொடர்புகொள்ளக் கூடிய தொலைபேசி இலக்கமாக 1985 என்ற இலக்கத்தை தொலைத்தொடர்புகள் ஒழுங்குறுத்துகை ஆணைக்குழு பெற்றுத் தந்தது. இந்த தொலைபேசி வசதியின் ஊடாக 2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில் 1,330 எண்ணிக்கையான தொலைபேசி அழைப்புகள் கிடைத்தன.

2018 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து (UNDP) 40 மில்லியன் ரூபா பெறுமதியான ஒரு மானியம் கிடைத்தது. அந்த மானியத்தில் எஞ்சிய 13.2 மில்லியன் ரூபா நிதி இந்த அதிகார சபையின் குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் பொருட்டு பயன்படுத்தப்பட்டது. இதன் போது குறிப்பாக இந்த தேசிய அதிகார சபயின் அலுவலர்களுக்கும், இந்த சபையின் உதவி மற்றும் பாதுகாப்பு பிரிவு உத்தியோகத்தர்களுக்கும் தொழில் நுட்ப அறிவை மேம்படுத்தும் முகமாக அவர்களுக்கு பயிற்சி அளிக்கும் நிகழ்ச்சித் திட்டங்களும் அதே போல் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், பொலிஸ் விஷேட விசாரணைப் பிரிவு உத்தியோகத்தர்கள், இலங்கை சட்டத்தரனிகள் சங்கத்தின் (யாழ்ப்பாணம்) சட்டத்தரனிகள், சட்டமா அதிபர் திணைக்களத்தின் அரச சட்டத்தரனிகள், சட்டத்தரனிகள் சங்கத்தின் சட்டத்தரனிகள், சிவில் அமைப்பு நிறுவனங்களின் ஊழியர்கள், கல்வி அமைச்சின் வலயக் கல்வி அதிகாரிகள், அம்பாந்தோட்டை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களின் அரச உத்தியோகத்தர்கள், குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான இந்த தேசிய அதிகார சபைக்கும் மற்றும் இந்த அதிகார சபையின் உதவி மற்றும் பாதுகாப்பு பிரிவுக்கும் புதிதாக ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்கள் ஆகியோரை விழிப்பூட்டுவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களும் மற்றும் நல்லிணக்க நிகழ்ச்சித் திட்டங்களும் 2019 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்டன. அத்தகைய தரப்புகளின் பங்குபற்றலில் சுமார் 13 வேலையரங்குகள் நடத்தப்பட்டன. மேலும், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து (UNDP) கிடைக்கும் நேரடி உதவியில் இந்த அதிகார சபையின் உத்தியோகத்தர்கள், சிறுவர் நன்னடத்தை மற்றும் சிறுவர் உரிமைகள் ஊக்குவிப்பு உத்தியோகத்தர்கள், மேல் மாகாண குற்றங்களுக்கும் மற்றும் சிறு குற்றங்களுக்குமான பொலிஸ் நிலைய பொறுப்பு அதிகாரிகள், மற்றும் மேல் மாகாண மகளிர் மற்றும் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஆகியோரின் நிமித்தம் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் ஏற்பாடு

செய்யப்பட்டு நடத்தப்பட்டன. இவை தவிர ஐக்கிய நாடுகள் அமைப்பின் சிறுவர் நிதியம் (Unicef) நேரடியாக உதவிகளை வழங்கியன் மூலம் இந்த அதிகார சபையில் ஏற்பாடு செய்யப்பட்டு ஒரு வேலையரங்கு, குற்றத்தால் பலியாகும் சிறுவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாக்கும் பொருட்டு இந்த அதிகார சபையின் தொழில் நுட்ப பிரிவு உத்தியோகத்தர்களினதும் மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகளினதும் பங்குபற்றலில் நடத்தப்பட்டது. அதனூடாக எமது அதிகார சபைக்கு பொருத்தமான குறித்த சட்டத்தை செயல் வலுப்பெறச் செய்து நடைமுறைப்படுத்தும் செயல் நடவடிக்கையில் நேரடியாக பங்களிப்பு செய்கின்ற தரப்புகளுக்கு என பல விஷேட விரிவுரைகளும் எமது அதிகார சபையினது முகாமைத்துவ சபையின் கல்விமான்களினால் நிகழ்த்தப்பட்டன. நடத்தப்பட்ட இந்த சகல நிகழ்ச்சித் திட்டங்களின் போது எமது அதிகார சபையினது தொழில் நுட்ப செயற்பாடுகள் தொடர்பான கைந்நூல்களும் மற்றும் சுருக்கக் கையேடுகளும் மற்றும் ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் (Transparency International) நிறுவனம் வழங்கிய கைந்நூல்களும் பகிர்ந்தளிக்கப்பட்டன. மேலும் எமது அதிகார சபை தயாரித்த பதாகைகள் நாட்டின் சகல மாவட்ட செயலாளர் அலுவலகங்களுக்கும் (25) மற்றும் பிரதேச செயலாளர் அலுவலகங்களுக்கும் (331) மற்றும் தேசிய பாடசாலைகளுக்கும் (353) அவற்றின் வளாகங்களிலுள்ள அறிவித்தல் பலகைகளில் காட்சிப்படுத்தும் முகமாக பகிர்ந்தளிக்கப்பட்டன.

சிறுவர் துஷ்பிரயோகம் அதிகளவில் நிகழும் ஆபத்து வாய்ந்த வட மத்திய மாகாணத்தின் கலென்பிந்துனுவெவ வலயக் கல்விப் பிரிவு தம்மென்னாவ வேலுசுமன மகா வித்தியாயலத்தில் நடத்திய விளம்பர நிகழ்ச்சிக்கு இணையாக 10,000 பாடசாலை மாணவர்களையும், 1,000 பெற்றோர்களையும், 600 ஆசிரிய ஆசிரியைகளையும் விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. நாட்டில் காணப்படும் 250 நீதிமன்ற வளாகங்களில் காட்சிப்படுத்தும் முகமாக 820 பதாகைகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

எமது இந்த அதிகார சபை ஆரம்பிக்கப்பட்டு அது தனது ஆரம்ப கட்டத்தில் இருப்பதால் பொது மக்களை விழிப்பூட்டும் பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பதாகைகளையும், வீடியோக்களையும் மற்றும் வானொலி க்லிப்களையும் தயாரித்து ரூபவாஹினியில் / வானொலியில் ஒரு மாத காலமாக இந்த அதிகார சபை பற்றி பிரச்சாரம் செய்யப்பட்டது. இதன் ஊடாக எமது அதிகார சபை வழங்கும் சேவைகள் பற்றி பொது மக்களுக்கு அறியப்படுத்தப்பட்டது.

ட்ரான்ஸ்பேரென்ஸி இன்டர்நெஷனல் (Transparency International) நிறுவனத்தின் மூலமாக, குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் உதவுவதற்கும் மற்றும் பாதுகாப்பதற்குமான சட்டத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள குற்றத்தால் பலியானவர்களினதும் மற்றும் சாட்சியாளர்களினதும் உரிமைகளையும் மற்றும் உரித்துக்களையும் மற்றும் இந்த அதிகார சபை வழங்கும் சேவைகளையும் உள்ளடக்கி அச்சிடப்பட்ட 1,000 துண்டுப் பிரசுரங்கள் 2019 ஆம் ஆண்டில் பகிர்ந்தளிக்கப்பட்டன.

# அறிமுகம்

குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாக்கும் நிமித்தம் முறையான ஒரு சட்டக் கட்டமைப்பையும் மற்றும் ஒரு வேலைத் திட்டத்தையும் அறிமுகப்படுத்தி குற்றத்திற்கு எதிராக சட்ட நிவாரணத்தை பெற்றுக் கொடுக்கும் பொறிமுறையை வலுப்படுத்தும் பொருட்டு பாராளுமன்றத்தின் மூலம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட 2015 இன் 04 ஆம் இலக்க குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் உதவுவதற்கும் மற்றும் அவர்களை பாதுகாப்பதற்குமான சட்டத்தின் கீழ், குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான இந்த தேசிய அதிகார சபை தாபிக்கப்பட்டுள்ளது. இந்த அதிகார சபை டென்ஸில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல எனும் முகவரியில் அமைந்துள்ள இலக்கம் 428/1ஏ கட்டிடத் தொகுதியின் முதலாம் மாடியில் ஏறக்குறைய 2800 சதுர அடி பரப்பளவு கொண்ட ஒரு பகுதியில் தாபிக்கப்பட்டுள்ளது. மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்கள் மூலம் 2016.01.08 ஆம் திகதி இந்த அதிகார சபை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. அதன் பின்னர், 1966/02 ஆம் இலக்க 2016.05.09 ஆம் திகதிய அதி விஷேட வர்த்தமானியின் மூலம் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் குறித்த இந்த அதிகார சபை அரசியலமைப்பின் 43(2) ஆம் உறுப்புரையின் கீழ் 2016.04.27 ஆம் திகதி முதல் செயல் வலுப்பெறும் வகையில் கௌரவ நீதி அமைச்சருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்கு அமைய, நீதி அமைச்சரின் மூலம் 1967/08 ஆம் இலக்க 2016.05.16 ஆம் திகதிய அதி விஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட குறித்த அறிவித்தலின் ஊடாக 2015 இன் 04 ஆம் இலக்க குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் உதவுவதற்கும் மற்றும் பாதுகாப்பதற்குமான சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சகல பிரிவுகளும் 2016.05.18 ஆம் திகதி முதல் செயல் வலுப்பெறும் வகையில் செயற்படுத்தப்பட்டுள்ளன.

குறித்த சட்டத்தின் 12 (ஆ) பிரிவின் பிரகாரம் மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களினால் 2016.08.11 ஆம் திகதி முதல் செயல் வலுப்பெறக் கூடிய வகையில் இந்த அதிகார சபையின் முகாமைத்துவ சபை நியமிக்கப்பட்டுள்ளது. இந்த முகாமைத்துவ சபை நீதி அமைச்சின் செயலாளர், பொலிஸ் திணைக்களத்திற்கு பொறுப்பான விடய அமைச்சரின் செயலாளர், மகளிர் விவகாரங்கள் மற்றும் சிறுவர் விவகாரகள் ஆகியவற்றுக்கு பொறுப்பான விடய அமைச்சர்களின் அமைச்சுக்களினது செயலாளர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர், மற்றும் சட்டமா அதிபரின் பிரதிநிதி ஒருவர் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் மாஅதிபர் பதவியை வகிக்கும், பொலிஸ் மாஅதிபரின் பிரதிநிதி ஒருவர் அடங்கலாக உத்தியோகபூர்வமாக நியமிக்கப்படுகின்ற ஏழு (7) உறுப்பினர்களையும் மற்றும் குற்றவியல், குற்றத்திற்கான சட்ட நிவாரண முறைமை, மனித உரிமைகள் ஊக்குவிப்பு மற்றும் மனித உரிமைகள் பாதுகாப்பு அல்லது மருத்துவ விஞ்ஞான அல்லது அதனுடன் தொடர்புடைய தொழில் பிரிவுகளில் கல்வி அல்லது தொழில் தகைமைகள் பெற்ற அனுபவமுடைய நபர்பகளுக்கு இடையிலிருந்து மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்கள் மூலம் நியமிக்கப்படும் ஐந்து உறுப்பினர்களையும் கொண்டமைந்ததாகும். மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களின் மூலம், குறித்த சபைக்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரான சொலிசிற்றர் ஜெனரால் ஜனாதிபதி சட்டத்தரனி சுகத கமலத் அவர்கள் 2016 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11

ஆம் திகதி முதல் செயல் வலுப்பெறும் வகையில் இந்த அதிகார சபையின் தலைவராக நியமிக்கப்பட்டார்கள்.

**குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் உதவுவதற்கும் மற்றும் அவர்களை பாதுகாப்பதற்குமான சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்கள் பின்வருமாறு:**

**(குறித்த சட்டத்தின் (2) ஆம் பிரிவு)**

1. குற்றத்தால் பலியானவர்களினதும் மற்றும் சாட்சியாளர்களினதும் உரிமைகளையும் மற்றும் உரித்துக்களையும் குறிப்பீடு செய்தல், உறுதி செய்தல் மற்றும் செயற்படுத்தப்படுதல், அத்தகைய உரிமைகளையும் மற்றும் உரித்துக்களையும் ஊக்குவித்தல், அவற்றைப் பாதுகாத்தல், செயல் வலுப்பெறச் செய்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் என்பவற்றின் நிமித்தம் தேவையான ஒரு பொறிமுறையை தயாரித்தல்.
2. குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் உதவியையும் மற்றும் பாதுகாப்பையும் பெற்றுக் கொடுத்தல்.
3. குற்றத்தால் பலியானவர்களுக்கு குற்றம் செய்ததால் குற்றவாளியாக காணப்படும் நபர்களிடமிருந்து குற்றத்தால் பலியானவர்களுக்கு நஷ்டஈடுகளை பெற்றுக் கொடுக்க ஆவணம் செய்தல்.
4. சீர்திருத்தம், நஷ்டஈடு, மீளளிப்பு மற்றும் புனர்வாழ்வு என்பன அடங்கலாக குற்றத்தால் பலியானவர்களுக்கு உதவிகளை பெற்றுக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளை செய்து வழங்குதல்.
5. குற்றத்தால் பலியானவர்களினதும் மற்றும் சாட்சியாளர்களினதும் உரிமைகளையும் மற்றும் உரித்துக்களையும் மேம்படுத்தும் பொருட்டு, அரச சட்ட மருத்துவ அதிகாரிகள் மற்றும் அரச ஊழியர்கள் ஆகியோரின் கரும பணிகளையும் கடமைகளையும் மற்றும் பொறுப்புக்களையும் குறிப்பீடு செய்தல்.
6. குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் எதிராக புரியப்படக் கூடிய குற்றங்களை குறிப்பீடு செய்தல் மற்றும் அத்தகைய குற்றங்களை புரிகின்ற நபர்களுக்கு எதிராக விதிக்கக் கூடிய தண்டனைகளை நிர்ணயித்தல்.
7. குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பது பற்றிய சிறந்த கொள்கைகளை ஏற்றுக் கொள்ளச் செய்தல் மற்றும் அவற்றை செயற்படுத்துதல்.

**குற்றத்தால் பலியானவர்களினதும் மற்றும் சாட்சியாளர்களினதும் உரிமைகளும் மற்றும் உரித்துக்களும் மற்றும் குற்றத்தால் பலியானவர் ஒருவருக்கு இருக்கின்ற உரிமைகளும் (குறித்த சட்டத்தின் (3) ஆம் பிரிவு)**

1. சமனாகவும் மற்றும் நியாயமாகவும் குற்றத்தால் பாதிக்கப்பட்டவரின் கௌரவமும் மற்றும் தனித்துவமும் மதிக்கப்படச் செய்வதற்கான (3 (1) (அ) பிரிவு)
2. குற்றத்தால் பலியானவர் சிறுவர் ஒருவராக இருக்கும் பட்சத்தில் அவரின் அதிகபட்ச நலன்கள் உறுதிப்படுத்தப்படுவதை கருத்திற் கொள்ளச் செய்வதற்கான (3 (1) (ஆ) பிரிவு)
3. குற்றத்தால் பலியானவர் என்ற ரீதியில் ஏதாவது ஒரு நட்டம் ஏற்பட்டிருப்பின், அதன் நிமித்தம் தாமதியாமல் பொருத்தமான ஒரு நிவாரணத்தை பெற்றுக் கொள்வதற்கான (3 (1) (இ) பிரிவு)
4. உளவியல் அல்லது உடலியல் ரீதியில் ஏதாவது துன்புறுத்தல்கள் நிகழ்ந்திருப்பின், அதற்கான மருத்துவ சிகிச்சையை பெற்றுக் கொள்வதற்கான (3 (1) (ஈ) பிரிவு)
5. அச்சுறுத்தல்கள் மற்றும் பயமுறுத்தல்கள் என்பவற்றிலிருந்து உரிய முறையில் பாதுகாப்பு பெறுவதற்கான (3 (1) (உ) பிரிவு)
6. குற்றத்தால் பலியானவர் வேண்டுகோள் விடுத்துள்ள சந்தர்ப்பத்தில், இந்த அதிகார சபையின் மூலம் அல்லது உதவிப் பிரிவு மூலம் சட்ட நிலவரம் பற்றி அறிந்து கொள்வதற்கும், முறைப்பாடு தொடர்பான விசாரணைகள் பற்றி அறிந்து கொள்வதற்கும், நீதிமன்ற நடவடிக்கைகளினது முன்னேற்றம் பற்றி அறிந்து கொள்வதற்கும், தேவையான மருத்துவ, சமூக சேவைகளையும் மற்றும் ஏனைய சேவைகளையும் பற்றி அறிந்து கொள்வதற்குமான (3 (1) (ஊ) பிரிவு)
7. பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரைக் கொண்டு முறைப்பாட்டை பதிந்து கொள்வதற்கும் மற்றும் அந்த முறைப்பாட்டை முழுமையாக விசாரணை செய்து கொள்வதற்குமான (3 (1) (எ) பிரிவு)
8. உரிய குற்றம் தொடர்பில் பல விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்ற காலப் பகுதியினுள் உரிய சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அலுவலர் ஒருவர் முன்னிலையில் சட்டத்தரனி ஒருவர் மூலமாக தோன்றி விடயங்களை சமர்ப்பிப்பதற்கான (3 (1) (ஏ) பிரிவு)
9. பொலிஸ் மூலம் நீதிவான் நீதிமன்றத்திற்கு கோவையிடப்பட வேண்டிய அறிக்கைகளின் பிரதிகளை பெற்றுக் கொள்வதற்கான (3 (1) (ஐ) பிரிவு)
10. குற்றத்தால் பலியானவருக்கு எதிராக புரியப்பட்டுள்ள குற்றம் தொடர்பாக நீதிமன்ற வழக்கு நடவடிக்கைகளை தொடர்வதற்கு முன்னரும் மற்றும் வழக்கு நடவடிக்கைகள் தொடரப்பட்டு அத்தகைய நடவடிக்கைகள் முன்னெடுத்துச் செல்லப்படும் காலப் பகுதியிலும் சட்டமா அதிபர் அவர்களிடம் விடயங்களை சமர்ப்பிக்கும் பொருட்டு சட்டத்தரனி ஒருவரின் மூலமாக கடிதம் ஒன்றை அனுப்புவதற்கான அல்லது பிரதிநிதியை நியமிப்பதற்கான (3 (1) (ஒ) பிரிவு)
11. உரிய குற்றம் தொடர்பாக விசாரணையை நடத்தும் விசாரணை அதிகாரிக்கு கடிதத்தை அனுப்புவதற்கான அல்லது பிரதிநிதியை நியமிப்பதற்கான மற்றும் அந்தப் பிரதிநிதியினால் பதில்களை பெற்றுக் கொள்வதற்குமான (3 (1) (ஓ) பிரிவு)
12. குற்றத்தைப் புரிந்த நபர் குற்றவாளியாக கணிக்கப்பட்டதன் பின்னர் அவருக்கு எதிரான தண்டனை நிர்ணயிக்கப்படுவதற்கு முன்னர், அந்தக் குற்றம் குற்றத்தால் பலியானவரினது வாழ்க்கையை பாதிக்கும் விதம் பற்றி தானாகவோ அல்லது

சட்டத்தரனி ஒருவர் மூலமாகவோ நீதிமன்றத்திற்கு எடுத்துரைப்பதற்கான (3 (1) (ஓ) பிரிவு)

13. குற்றவாளி ஒரு மேன்முறையீட்டை செய்துள்ள அல்லது ஒரு மீளாய்வு கோரலை விடுத்துள்ள ஒரு சந்தர்ப்பத்தில், அந்தக் குற்றம், குற்றத்தால் பலியானவரின் வாழ்க்கையை பாதிக்கும் விதம் பற்றி தானாகவோ அல்லது சட்டத்தரணி ஒருவர் மூலமாகவோ நீதிமன்றத்திற்கு எடுத்துரைப்பதற்கான (3 (1) (ஔ) பிரிவு)

14. குற்றம் புரிந்த நபருக்கு மன்னிப்பு அளிக்கப்படுவதை கருத்திற் கொள்ளும் போது அல்லது ஒரு தண்டனை குறைக்கப்படுவதை கருத்திற் கொள்ளும் போது அது பற்றிய ஒரு அறிவித்தலை பெறுவதற்கும் மற்றும் அந்தக் குற்றம், குற்றத்தால் பலியானவரின் வாழ்க்கையை பாதிக்கும் விதம் பற்றி தானாகவோ அல்லது சட்டத்தரணி ஒருவர் மூலமாகவோ உரிய அதிகார சபைக்கு எடுத்துரைப்பதற்கான (3 (1) (ට) பிரிவு)

**குற்றத்தால் பலியான ஒருவருக்கு இருக்கின்ற உரிமைகள் <u>(குறித்த சட்டத்தின்</u> (4) <u>ஆம் பிரிவு</u>)**

- ✓ ஏதாவது ஒரு நீதிமன்ற நடவடிக்கைக்காக சமூகமளிப்பதால், குற்றத்திற்கு பலியானவரினால் செலவிடுவதற்கு நேரிடும் செலவுகள் தொடர்பாக நீதிமன்றத்தின் மூலமாக ஏதாவது ஒரு தொகையை பெற்றுக் கொள்வதற்கான (4) (1) பிரிவு)
- ✓ குற்றத்தால் பலியாகுவதால் அனுபவித்த உளவியல் அல்லது உடலியல் பாதிப்புகள் நிமித்தம் பொருத்தமான சிகிச்சைகள், ஆலோசனை சேவைகள் என்பவற்றை அரசாங்கத்திடமிருந்து கோருவதற்கான (4 (2) பிரிவு)
- ✓ அரசாங்கத்தினால் மருத்துவ சிகிச்சையை அல்லது ஆலோசனைகளை பெற்றுக் கொள்ள இயலாத ஒரு சந்தர்ப்பத்தில், அத்தகைய தேவையை தனியார் துறையிலிருந்து பெற்றுக் கொள்ளும் நிமித்தம் நீதிமன்றத்தை கோருவதற்கான (4) (3) பிரிவு)

**சாட்சியாளர் ஒருவருக்கு இருக்கின்ற உரிமைகள் <u>(குறித்த சட்டத்தின்</u> (5) <u>ஆம் பிரிவு</u>)**

- ✓ சாட்சியாளர் ஒருவரினது கௌரவமும் மற்றும் தனித்துவமும் நியாயமான ஒரு விதத்தில் மதிக்கப்படச் செய்வதற்கான (5 (1) பிரிவு)
- ✓ ஒரு அடிப்படை உரிமை மீறப்படுவது தொடர்பான தகவல்களை வழங்குதல், ஏதாவது ஒரு குற்றம் தொடர்பில் ஒரு விசாரணை நடத்தப்படுகின்ற காலப் பகுதியில் சுயமாக ஒரு கூற்றை வெளிப்படுத்துதல் அல்லது ஏதாவது குற்றம் செய்யப்பட்டமை அல்லது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டமை தொடர்பில் ஒரு நீதிமன்றத்தில் சாட்சி அளிக்கும் போது சாட்சியாளர் எந்த ஒரு துன்புறுத்தலுக்கும் ஆளாக்கப்படாமல் இருப்பதற்கான உரிமை. அந்தத் தன்மையிலான ஒரு துன்புறுத்தலுக்கு எதிராக பாதுகாப்பை பெற்றுக் கொள்ள சாட்சியாளருக்கு உரிமை உண்டு (5 (1) பிரிவு)

**தகவல்களை வழங்கும் நபர்களுக்கு இருக்கின்ற உரிமைகள் (குறித்த சட்டத்தின் (6) ஆம் பிரிவு)**

சாட்சியாளராக இருக்கின்ற அல்லது சாட்சியாளராக இருக்காத எவரேனும் நபர் ஒருவர் தனது வேலை செய்யும் இடத்தில் நிகழ்கின்ற ஒரு குற்றம் அல்லது அடிப்படை உரிமை மீறல் தொடர்பில் தகவல்களை வழங்குதல், அது தொடர்பில் ஒரு முறைப்பாட்டைச் செய்தல் அல்லது ஒரு நீதிமன்றத்தில் சாட்சி அளித்தல் முதலிய காரணங்களினால் அந்த நபருக்கு நிகழ்த்தப்படும் எந்த ஒரு துன்புறுத்தலுக்கு அல்லது தொழிலில் வேறுபாடு காட்டுவதற்கு எதிராக பாதுகாப்பை பெற்றுக் கொள்வதற்கு உரிமை உண்டு (6 ஆம் பிரிவு)

**நீதிமன்றங்களின் கருமங்களும் மற்றும் பணிகளும்**

**(குறித்த சட்டத்தின் (13) ஆம் பிரிவு)**

1. குற்றத்தால் பலியான நபர்களின் உரிமைகளையும் மற்றும் உரித்துக்களையும் இனங்கண்டு அவற்றுக்கு மதிப்பளிக்கச் செய்தல் மற்றும் ஊக்குவிக்கச் செய்தல்.
2. சாட்சியாளர்களின் உரிமைகளை இனங்கண்டு அவற்றுக்கு மதிப்பளிக்கச் செய்தல் மற்றும் ஊக்குவிக்கச் செய்தல்.
3. குற்றத்தால் பலியான நபர்களினதும் அது போல் சாட்சியாளர்களினதும் உரிமைகளை பாதுகாத்தல் அல்லது பாதுகாப்பதற்கு தேவையான ஏற்பாடுகளைச் செய்தல்.
4. குற்றத்தால் பலியான ஒருவரின் அல்லது சாட்சியாளர் ஒருவரின் ஏதாவது ஒரு உரிமை அல்லது உரித்து மீறப்பட்டுள்ளமை தொடர்பில் கிடைக்கும் ஏதாவது ஒரு முறைப்பாட்டின் அல்லது ஏதாவது தகவல்களின் அடிப்படையில், இந்தச் சட்டத்தின் கீழ் குற்றத்தால் பலியான நபர்களினதும் மற்றும் சாட்சியாளர்களினதும் உரிமைகளையும் மற்றும் உரித்துக்களையும் இனங்காணுதல், பாதுகாத்தல் மற்றும் ஊக்குவிக்கப்படுவதை உறுதிசெய்தல் என்பவற்றின் நிமித்தம், புரியப்பட்டது எனக் கூறப்படும் மீறல் தொடர்பில் விசாரணையை மேற்கொள்ளச் செய்யுமாறும் அதே போல் அது தொடர்பில் பொருத்தமான சீர்திருத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளச் செய்யுமாறும் உரிய நீதிமன்றத்தைக் கோருதல்.
5. குற்றத்தால் பலியான நபர்களுக்கும் அதே போல் சாட்சியாளர்களுக்கும் தேவையான சிகிச்சைகள், நஷ்டஈடுகள், மீள்தாபிப்புகள் மற்றும் புனர்வாழ்வு அளித்தல் தொடர்பான நடவடிக்கைகளை எடுத்தல் என்பன அடங்கலாக தேவையான உதவிகளை வழங்குதல்.
6. குற்றத்தால் பலியான நபர்களுக்கு இந்தச் சட்டத்தின் 29 ஆம் பிரிவின் மூலம் தாபிக்கப்பட்ட குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் எனக் காணப்படுகின்ற நிதியத்திலிருந்து நஷ்டஈடுகளைப் பெற்றுக் கொடுப்பது

தொடர்பான ஒரு பொறிமுறைத் திட்டத்தைத் தயாரித்து அதனை அங்கீகரிக்கச் செய்து, செயற்படுத்துதல்.

7. இந்தச் சட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள குற்றத்தால் பலியான நபர்களினதும் மற்றும் சாட்சியாளர்களினதும் உரிமைகளும் மற்றும் உரித்துக்களும் பற்றி பொதுமக்களை விழிப்பூட்டுதல்.
8. குறிப்பாக குற்றத்தால் பலியான நபர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் பின்வரும் விடயங்கள் தொடர்பில்:
    i. பயனுள்ள பாதுகாப்பு
    ii. தேவையான சிகிச்சைகள், புனர்வாழ்வு மற்றும் ஆலோசனைகள் மற்றும்
    iii. வேறு பொருத்தமான உதவிகளை வழங்கல்

    அடங்கலாக,

    குற்றத்தால் பலியான நபர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் இந்தச் சட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள உரிமைகளையும் மற்றும் உரித்துக்களையும் செயல்வலுப் பெறச் செய்யும் நிமித்தம் மேற்கொள்ள வேண்டிய, ஏற்றுக் கொள்ள வேண்டிய அல்லது செயற்படுத்த வேண்டிய பொருத்தமான மற்றும் விஷேடமான நடவடிக்கைகள் தொடர்பில் பொதுவாக அல்லது ஒவ்வொரு சந்தர்ப்பமும் தனித்தனியாக கருத்திற் கொள்ளப்படுதல் எனும் அடிப்படையில், இலங்கை பொலிஸ் திணைக்களத்திற்கும் மற்றும் வேறு ஏதாவது ஒரு அரச திணைக்களத்திற்கும், நியதிச்சட்ட சபைக்கும் மற்றும் அரச ஊழியர்களுக்கும் அறிவுரைகள் வழங்குதல் மற்றும் சிபாரிசுகளைச் செய்தல்.
9. பல அதிகார சபைகளினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு பின்பற்றப்படுகின்ற, தற்பொழுது நடைமுறையிலுள்ள கொள்கைகள் மற்றும் சட்டங்கள் அதே போல் நடவடிக்கைகள் மற்றும் நடைமுறைகள் என்பன குற்றத்தால் பலியான நபர்களினதும் மற்றும் சாட்சியாளர்களினதும் உரிமைகளையும் மற்றும் உரித்துக்களையும் ஊக்குவித்தல் மற்றும் பாதுகாத்தல் ஆகியன தொடர்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள நியமங்களுக்கும் மற்றும் உரிய ஏற்பாடுகளுக்கும் இணங்க உறுதி செய்து கொள்ளும் நிமித்தம் அவற்றை மீளாய்வு செய்தல் மற்றும் அத்தகைய மீளாய்வுகளை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான சட்டங்கள், கொள்கைகள் மற்றும் சட்ட சார் நடவடிக்கைகளை ஏற்றுக் கொள்ளச் செய்தல், திருத்துதல் மற்றும் பிரயோகித்தல் என்பன தொடர்பில் சிபாரிசு செய்தல்.
10. ஏதாவது ஒரு நீதிமன்றத்தின் அல்லது ஒரு ஆணைக்குழுவின் அல்லது வேறு எவரேனும் நபர் ஒருவரின் வேண்டுகோளினது அடிப்படையில், ஒரு சமகால அல்லது மிகவும் சமீபகால கட்புல தொடர்பாடலின் மூலமாக சாட்சிகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய ஏற்றுக் கொள்ளப்பட்ட விதிமுறைகள் மற்றும் சிறந்த செயன்முறைகள் என்பன தொடர்பான தகவல்களை பெற்றுக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்.
11. குற்றத்தால் பலியான நபர்களினதும் மற்றும் சாட்சியாளர்களினதும் வயதுகள், பால்நிலை, சமயம், மொழி, கலாசார நம்பிக்கை, பழக்கவழக்கங்கள், இன அல்லது குல அல்லது உடலியல் குறைபாடு அல்லது வேறு ஏதாவது காரணங்கள் என்பவற்றின் அடிப்படையில் நிகழக் கூடிய பாதிப்புகளின் விளைவாக குற்றத்தால் பலியான நபர்களுக்கு அல்லது சாட்சியாளர்களுக்கு எழுந்துள்ள

தேவைகள் அதே போல் விஷேட குழுக்களில் அடங்கும் குற்றத்தால் பலியான நபர்களுக்கு எழுந்துள்ள விஷேட தேவைகள் முதலிய தேவைகள் பற்றி, இலங்கை பொலிஸ் திணைக்கள உத்தியோகத்தர்கள், சிறைச்சாலைகள் திணைக்கள உத்தியோகத்தர்கள், அரச மருத்துவ அதிகாரிகள், நன்னடத்தை மற்றும் சமூக சேவை என்பற்றுடன் சம்பந்தப்படுகின்ற அரச ஊழியர்கள் முதலியோர் அடங்கலாக, சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் சம்பந்தப்படுகின்ற அரச ஊழியர்கள் முதலிய தரப்புகளை உணரச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

12. இலங்கை பொலிஸ் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் சிறைச்சாலைகள் திணைக்கள உத்தியோகத்தர்கள், அரச மருத்துவ அதிகாரிகள் மற்றும் அரச சமூக சேவை நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் அடங்கலாக, சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் சம்பந்தப்படுகின்ற நீதிமன்றங்களினாலும் மற்றும் ஆணைக்குழுக்களினாலும், வேறு ஏதாவது நியாயாதிக்க சபைகளினாலும், அதே போல் அரச ஊழியர்களினாலும் மற்றும் நியதிச்சட்ட சபைகளினது ஊழியர்களினாலும், குற்றத்தால் பலியான நபர்களினதும் மற்றும் சாட்சியாளர்களினதும் உரிமைகளை பாதுகாப்பது தொடர்பான நிருவாகப் பிரமாணக் குறிப்புகள் மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியமங்கள் மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விதிமுறைகள் மற்றும் சிறந்த செயன்முறைகள் என்பவற்றைப் பின்பற்றுதல் மற்றும் ஏற்புடையதாக்கிக் கொள்வதை ஊக்குவித்தல் மற்றும் சிபாரிசு செய்தல்.

13. (i) குற்றங்கள் நிகழ்வதை குறைக்கக் கூடிய;

(ii) குறித்த குற்றங்களினால் பலியானவர்களுக்கு ஏற்படக் கூடிய அச்சுறுத்தல்களை குறைக்கக் கூடிய அல்லது தவிர்க்கக் கூடிய;

(iii) குறித்தால் பலியானவர்களுக்கு பயனுள்ள விதத்தில் சிகிச்சையளிக்கக் கூடிய, புனர்வாழ்வளிக்கக் கூடிய, ஆலோசனை வழங்கக் கூடிய, உதவி செய்யக் கூடிய, நஷ்டஈடுகளை செலுத்தக் கூடிய மற்றும் பாதுகாக்கக் கூடிய;

(iv) சட்டத்தை நடைமுறைப்படுத்தும் ஒரு அதிகார சபையின் அல்லது ஒரு நீதிமன்றத்தின் அல்லது வேறு ஒரு ஆணைக்குழுவின் மற்றும் வேறு ஒரு நியாயாதிக்க சபையின் முன்னிலையில் விசாரிக்கப்படும் ஒரு வழக்கு நடவடிக்கையின் போது, அச்சமின்றி சாட்சியாளர்கள் தமது கூற்றுக்களை வெளிப்படுத்த அல்லது சாட்சியமளிக்க உதவக் கூடிய ஒரு சூழலை உருவாக்கக் கூடிய;

(v) குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் உதவுவக் கூடிய மற்றும் அவர்களுக்கு பாதுகாப்பளிக்கக் கூடிய,

முறைகள் மற்றும் விதிமுறைகள் பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் அல்லது அவ்வாறு மேற்கொள்வதை ஊக்குவித்தல்;

14. குற்றங்கள் நிகழ்வதை குறைப்பதற்கும் மற்றும் குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் உதவுவதற்கும் மற்றும் அவர்களை பாதுகாப்பதற்கும் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டு அந்தந்த அரச நிறுவனங்களுக்கு அந்த நிறுவனங்களின் மூலம் தேர்ந்தெடுக்கக் கூடிய சமூக, சுகாதார, கல்வி, பொருளாதார மற்றும் குற்றங்கள் தவிர்த்தல் ஆகிய அம்சங்கள் பற்றிய கொள்கைகளை சிபாரிசு செய்தல்;

15. குற்றவியலுக்கு எதிராக நியாயத்தை பெற்றுக் கொடுக்கும் முறைமையில் தண்டனைகளை விதிப்பதற்கு ஒரு மாற்றுவழியாக குற்றத்தால் பலியானவர்களை அவர்கள் முன்பிருந்த நிலைக்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை ஊக்குவித்தல், அத்தகைய நடவடிக்கைகளை அங்கீகரித்து செயற்படுத்துவது தொடர்பாக சிபாரிசு செய்தல்;
16. குற்றவியலுக்கு எதிராக நியாயத்தை பெற்றுக் கொடுப்பதை நிருவகிக்கும் ஒரு விடயமாகவும் மற்றும் குற்றவியலுக்கு எதிராக நியாயத்தை பெற்றுக் கொடுக்கும் பொறிமுறையில் தண்டனைகளை விதிப்பதற்கு ஒரு மாற்றுவழியாக, குற்றத்தால் பலியானவர்களை முன்பிருந்த நிலைக்கு வரும் வகையில் நியாயமான நடவடிக்கை எடுக்கப்படுவதை ஊக்குவித்தல், அத்தகைய ஊக்குவிப்பு நடவடிக்கைகளை அங்கீகரித்து செயற்படுத்துவது தொடர்பான சிபாரிசுகளை செய்தல்;
17. குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் உதவுவதற்கான ஒரு திட்டத்தை மேம்படுத்துதல், அத்தகைய திட்டங்களை பயன்படுத்துதல் மற்றும் செயற்படுத்துதல்;
18. குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் உதவுவதற்கும் மற்றும் அவர்களை பாதுகாப்பதற்குமான பிரிவை தாபித்து அதனை நிருவகித்து செல்லும் பொருட்டு பொருத்தமான முன்னோடி ஆலோசனைகளை வழங்குதல்;
19. (i) இந்த அதிகார சபை குறித்த சட்டத்தின் குறிக்கோள்களுக்கு அவை செல்லுபடியாகும் தன்மையை வழங்கியுள்ள விதம்;

    (ii) இந்த அதிகார சபையின் தொழிற்பாடுகளையும் மற்றும் கரும பணிகளையும் மேற்கொண்டு நிறைவேற்றல்; மற்றும்

    (iii) தேவையான கொள்கைகள் மற்றும் சட்டமறுசீரமைப்புகள் என்பன பற்றிய ஒரு அறிக்கையை வருடாந்தம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்;
20. குறித்த சட்டத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் பொருட்டு தேவையான மேலும் ஏதாவது தொழிற்பாடுகளையும் மற்றும் கரும பணிகளையும் நிறைவேற்றுதல் அல்லது அத்தகையவற்றை செயற்படுத்துதல்.

**குறித்த சட்டத்தின் 11 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட இந்த அதிகார சபையின் அதிகாரத் தத்துவங்களையும் மற்றும் கரும பணிகளையும் கீழே காணப்படுகின்றவாறு சுருக்கமாகக் குறிப்பிட முடியும்.**

- ✓ **செயல்வலுப் பெறச் செய்யும் பொறுப்புப் பணி**

குற்றத்தால் பலியான நபர்களினதும் மற்றும் சாட்சியாளர்களினதும் உரிமைகளையும் மற்றும் உரித்துக்களையும் இனங்காணுதல், அவற்றை மதிக்கச் செய்தல், ஊக்குவித்தல், பாதுகாத்தல் மற்றும் விழிப்பூட்டுதல்.

- ✓ **அரை நீதிமன்றப் பொறுப்புப் பணிகள்**

குற்றத்தால் பலியான நபர்களினதும் மற்றும் சாட்சியாளர்களினதும் உரிமைகளும் மற்றும் உரித்துக்களும் மீறப்படுதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளல் மற்றும் விளம்புதல், அந்த மீறுகை தொடர்பாக பொருத்தமான

உரிய அரச அதிகாரிகளுக்கும் மற்றும் அரச நிறுவனங்களுக்கும் கட்டளையிடுதல்.

- ✓ **சேவைகளை வழங்கும் பொறுப்புப் பணி**

குற்றத்தால் பலியான நபர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் பாதுகாப்பு அளித்தல் மற்றும் உதவுவதற்கான வசதி செய்தல், நஷ்டஈடுகளைப் பெற்றுக் கொடுத்தல்.

- ✓ **ஒழுங்குறுத்தும் பொறுப்புப் பணி**

முன்னோடியான ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் கண்காணிப்புச் செய்தல், குற்றங்கள் நிகழ்வதை குறைக்கக் கூடிய முறைகளும் மற்றும் விதிமுறைகளும் பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் மற்றும் ஊக்குவித்தல், குற்றங்களை தடுக்கக் கூடிய கொள்கைகள் பற்றிய சிபாரிசுகளை முன்வைத்தல்.

# பொலிஸ் உதவி மற்றும் பாதுகாப்பு பிரிவு

2015 இன் 4 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் தாபிப்பு பெற்ற மற்றொரு விஷேட பிரிவாகிய இந்தத் தேசிய அதிகார சபையின் ஆலோசனையிலும் மற்றும் வழிகாட்டலிலும் தொழிற்படும் இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள 'குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் உதவுவதற்கும் மற்றும் அவர்களை பாதுகாப்பதற்குமான பிரிவு' என அழைக்கப்படும் ஒரு விஷேட பொலிஸ் பிரிவு காணப்படுகின்றது. குறித்த சட்டத்தின் 19 (2) ஆம் பிரிவின் கீழ் முகாமைத்துவ சபைக்கு உத்தியோகபூர்வமாக நியமிக்கப்படும் சிரேஷ்ட பொலிஸ்மா அதிபரினது கண்காணிப்பின் கீழ் பணியாற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் இந்தப் பிரிவுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார். 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 03 ஆம் திகதி முதல் இந்தப் பிரிவின் கடமைப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தத் தேசிய அதிகார சபையின் மூலம் வழங்கப்படுகின்ற முன்னோடி ஆலோசனைகளை பின்பற்றி குறித்த இந்தப் 'பிரிவு' நிருவகித்துச் செல்லப்படுதல் வேண்டும். குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் பாதுகாப்பை வழங்குதல், அவர்களுக்கும் மற்றும் அவர்களின் சொத்துக்களுக்கும் விளைவிக்கப்படும் அச்சுருத்தல்கள் அதே போல் பாதிப்புகள் என்பன தொடர்பான ஒரு முறைப்பாடு, குற்றம் அல்லது வழங்கப்படும் தகவல்கள் முதலியன தொடர்பில் குறித்த இந்தப் 'பிரிவினாலேயே' பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் உதவியுடன் விசாரணை செய்வது இதன் பொறுப்புப் பணியாகும். இத்தகைய நபர்களுக்கு பாதுகாப்பை வழங்குதல் மற்றும் உதவுதல் ஆகியவற்றின் நிமித்தம் இந்த அதிகார சபை வெளியிடும் வழிகாட்டல்களின் அடிப்படையில் வினைத் திறன் வாய்ந்த ரீதியில் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு ஏற்பாடுகளை செய்து வழங்க தேவையான நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்படுதல் வேண்டும்.

**அதிகார சபையின் முகாமைத்துவ சபை உறுப்பினர்கள் பற்றிய விபரம்**

குறித்த சட்டத்தின் பிரகாரம் மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்கள் நியமித்த உறுப்பினர்கள்:-

1. தலைவர்:- ஜனாதிபதி சட்டத்தரனி சுகத கே. கமலத்
   ஒய்வுபெற்ற சொலிசிற்றர் ஜெனரால்
   சட்டமா அதிபர் திணைக்களம்



2. உதயகுமார அமரசிங்க
   குற்றவியல் பற்றிய சிரேஷ்ட விரிவுரையாளர்
   ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்



3. மருத்துவர் அஜித் தென்னகோன்
   பிரதான சட்ட மருத்துவ அதிகாரி



4. மருத்துவர் நீல் பெர்னாந்து
   விஷேட உளவியல் மருத்துவ நிபுணர்



5. மருத்துவர் ஹிரந்தி விஜேமான்ன

   விஷேட மருத்துவ நிபுணர்



உத்தியோகபூர்வமாக நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்:

1. திரு யசந்த கோதாகொட
   மேலதிக சொலிசிற்றர் ஜெனரால்
   சட்டமா அதிபர் திணைக்களம்



   ஜனாதிபதி சட்டத்தரனி திரு பிரியந்த நவான
   மேலதிக சொலிசிற்றர் ஜெனரால்
   சட்டமா அதிபர் திணைக்களம்

2. திரு எம்.ஆர். லதீப்
   சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்
   பொலிஸ் தலைமை அலவலகம்



திரு ஜகத் அபேகுணவர்த்தன

பிரதிப் பொலிஸ்மா அதிபர்

போக்குவரத்து மற்றும் தேர்தல்கள்

பொலிஸ் தலைமை அலுவலகம்

3. சட்டத்தரனி எச்.ஜி. ஹுசைன்
ஆணையாளர்
மனித உரிமைகள் ஆணைக்குழு



4. சட்டத்தரனி பியுமந்தி பீரிஸ்
மேலதிகச் செயலாளர் (சட்டம்)
நீதி அமைச்சு



5. திருமதி விஜித்தா செனவிரட்ன
மேலதிகச் செயலாளர்
சட்டம், ஒழுங்கு மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சு



6. திரு துஷித்த பி. வனிகசிங்க
மேலதிக செயலாளர்
பாதுகாப்பு மற்றும் சட்டம் மற்றும் ஒழுங்கு பற்றிய அமைச்சு



7. திருமதி எல்.ரீ.டீ. பெரேரா

அவதானிப்பாளர் (திறைசேரியின் பிரதிநிதி)

நிதி மற்றும் ஊடக அமைச்சு



**2019 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள் பற்றிய விபரம்**

1. திருமதி எல்.ரீ.டீ. பெரேரா  தலைவர்
   பொதுத் திறைசேரியின் பிரதிநிதி

2. திருமதி பியுமந்தி பீரிஸ் - மேலதிக செயலாளர்
   நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு

3. சட்டத்தரணி எச்.ஜி. ஹுசைன்
   ஆணையாளர்
   மனித உரிமைகள் ஆணைக்குழு

4. திருமதி விஜிதா செனவிரத்ன - மேலதிக செயலாளர்
   சிறுவர் மற்றும் மகளிர் விவகாரங்கள் அமைச்சு

5. திருமதி ஐ.என். பிரியந்தி - பிரதிநிதி
   தேசிய கணக்காய்வு அலுவலகம்

# பதவியணி பற்றிய விபரங்கள் - 2019

✓ **<u>சிரேஷ்ட முகாமைத்துவ பதவியணி</u>**

| | | |
|---|---|---|
| 1.பணிப்பாளர் நாயகம் | - | திரு உதயகுமார அமரசிங்க |
| 2. பணிப்பாளர் (சட்டம் மற்றும் அமுலாக்கல்) | - | செல்வி எஸ்.எஸ்.கே. கஸ்தூரிஆராச்சி |
| 3. பணிப்பாளர் (கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள்) | - | திரு ஐ. சிறிவர்த்தன |
| 4. பணிப்பாளர் (நிருவாகம் மற்றும் முகாமைத்துவம்) | - | திரு டப்ளியூ.ஜி.என். பெர்னாந்து |
| 5. பணிப்பாளர் (நிதி) | - | திருமதி ஜி.டீ.ஆர். பெரேரா |
| 6. உதவிப் பணிப்பாளர் (நிதி) | - | திருமதி ஆர்.ஏ.டீ. சமிலா திஷானி |
| 7. உதவிப் பணிப்பாளர் (சட்டம்) | - | திருமதி பி.என்.யூ. பட்டிஆராச்சி |
| 8. உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்) | - | திரு டப்ளியூ.எம். அஜித் பண்டார |
| 9. முகாமைத்துவ சபை செயலாளர் | - | திருமதி பீ.ஜி.எம்.எஸ்.ஆர்.டப்ளியூ. குணவர்த்தன |

✓ **<u>இரண்டாம்நிலை பதவியணி பற்றிய விபரம்</u>**

- ✓ சட்ட உத்தியோகத்தர் - எஸ்.எஸ். திக்கும்புர
  ரீ.எம்.பி.டீ. தென்னகோன்
- ✓ உள்ளகக் கணக்காய்வு உத்தியோக்கத்தர் - எம்.பி. ஜயவர்த்தன
- ✓ விசாரணை உத்தியோகத்தர் - எம்.எம்.எஸ்.பி. ஹேரத்
  எஸ்.எஸ். விஜேநாயக்க
  டப்ளியூ.பி.கே. விக்ரமசிங்க
  ரீ.ஏ.பீ.சி. ஜயசேக்கர
  எல்.சி.கே. லியனகே
- ✓ தகவல் உத்தியோகத்தர் - எம்.ஏ.எஸ்.ரீ. முணசிங்க
- ✓ மொழிபெயர்ப்பாளர் - ரீ.ஜே. குருகமகே

**3. மூன்றாம்நிலை பதவியணி பற்றிய விபரம்**

**முகாமைத்துவ உதவியாளர்கள் (தொழில் நுட்பம் சாராத) - 08**

1. திரு சஹன் ஹர்ஷன அத்துகோரள
2. திருமதி எஸ்.என்.எச். நதீஷா மதுமாலி நாணயக்கார
3. செல்வி பி.ஏ. திலினி தர்ஷிகா பெரேரா
4. திருமதி எம்.பி. சவித்ரா துலாஷனி குணசேக்கர
5. செல்வி ஐ.ஏ. ஹர்ஷனி இலேபெரும
6. திரு தர்ஷன் ரஜீவ் ஜயமனி
7. திருமதி கே.டீ. அயேஷா கித்மினி பெர்னாந்து
8. செல்வி சானிக்கா மதுரங்கி

✓ **ஆரம்பநிலை பதவியணி பற்றிய விபரம்**

**சாரதிகள்**

**சாரதிகளின் எண்ணிக்கை - 06**

- ✓ திரு யூ.டப்ளியூ. விமங்க பெத்தும்
- ✓ திரு டீ.எம். சம்பத் நிசாந்த பண்டார
- ✓ திரு ஏ. பிரபாத் நிசாந்த
- ✓ திரு எஸ்.பீ. பாக்கிய பிரதீப் மதுசங்க
- ✓ திரு கே. கசுன் மதுஷான் விமுக்தி
- ✓ திரு எஸ். காமினி விஜேகுமார

**அலுவலக உதவியாட்கள்**

**அலுவலக உதவியாட்களின் எண்ணிக்கை - 05**

1 .செல்வி டப்ளியூ. நதீஷானீ பெர்னாந்து

2. திருமதி ஜே.ஜி. சாமலீ மல்காந்தி விஜேவிக்ரம
3. திரு டப்ளியூ.எம். விமல புத்திக்க
4. திரு ஏ.ஏ. பிரதீப் குமார பெரேரா
5. திரு கசுன் மதுஷங்க யக்குபிட்டிய

## குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபையின் பதவியணி பற்றிய சுருக்க விபரம் - 2019/12/31

### அட்டவணை 01

| வகுதி | சம்பளக் குறியீடு | மு.சே.தி. அனுமதித்த ஆளணி | தற்போதுள்ள பதவியணி | நிலவும் வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|
| ***சிரேஷ்ட நிலை*** | | | | |
| பணிப்பாளர் நாயகம் (பதில்) | HM 2-3 | 1 | 1 | 0 |
| பணிப்பாளர் | HM 1-3 | 6 | 4 | 2 |
| உதவிப் பணிப்பாளர் | MM 1-3 | 3 | 3 | 0 |
| முகாமைத்துவ சபையின் செயலாளர் | MM 1-3 | 1 | 1 | 0 |
| ***மூன்றாம் நிலை*** | | | | |
| சட்ட உத்தியோகத்தர் | JM 1-1 | 2 | 2 | 0 |
| உள்ளகக் கணக்காய்வாளர் | JM 1-1 | 1 | 1 | 0 |
| விசாரணை உத்தியோகத்தர் | MA 4 | 6 | 5 | 1 |
| அரவணைப்பு உத்தியோகத்தர் | MA 4 | 10 | 0 | 10 |
| தொடர்பாடல் உத்தியோகத்தர் | MA 4 | 1 | 0 | 1 |
| தகவல் உத்தியோகத்தர் | MA 4 | 1 | 1 | 0 |
| மொழி பெயர்ப்பாளர் | MA 4 | 1 | 1 | 0 |
| ***இரண்டாம் நிலை*** | | | | |
| முகாமைத்துவ உதவியாளர் (தொழில் நுட்பம் சாராத) | MA 1-1 | 10 | 8 | 2 |
| ***ஆரம்ப நிலை*** | | | | |
| சாரதி | PL 3 | 6 | 6 | 0 |
| அலுவலக உதவியாள் | PL 1 | 6 | 5 | 1 |
| **மொத்தம்** | | **55** | **38** | **17** |

## குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபைக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அனுமதித்த ஆளணி பற்றிய விபரம்



# செயலாற்றுகை

# நிருவாக மற்றும் முகாமைத்துவ பிரிவு

பின்வருமாறு பதவிநிலை சாராத உத்தியோகத்தர்கள் பயிற்சி பாடநெறிகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

| பாடநெறியின் பெயர் | நிறுவனம் | பங்குபற்றிய உத்தியோகத்தர்களின் பெயர் | காலம் |
|---|---|---|---|
| புத்தகங்கள் கட்டுதல் | இலங்கை அச்சகத் திணைக்களம் | கசுன் மதுஷங்க யக்குபிட்டிய | 16.01.2019-27.03.2019 |
| தனியாள் கோவைகள் பேணல் | திறன்கள் அபிவிருத்தி நிதியம் | கே.டீ.ஐ. அயேஷா கித்மினி பெர்னாந்து | 28.01.2019-29.01.2019 |
| பணி நிலையங்களில் புரிந்த ஒழுக்கவீனங்கள் தொடர்பான ஒழுக்காற்று விசாரணை | சி.ஐ.பி.எம். நிறுவகம் (Charted Institute of Personnel Management) | டப்ளியூ.எம். அஜித் பண்டார | 26.02.2019 |
| அரச நிறுவனங்களில் கணக்காய்வு விசாரணைகளின் தடவைகளின் எண்ணிக்கையை குறைத்தல் | திறன்கள் அபிவிருத்தி நிதியம் | ஆர்.ஏ.டீ.சி. சமிலா திஷானி | 28.02.2019-01.03.2019 |
| அரச நிறுவனங்களில் லீவுகளை பெற்றுக் கொள்ளல் | திறன்கள் அபிவிருத்தி நிதியம் | 01. உமேஷா ஹஷினி லொக்குசூரிய<br>02. கே.டீ. அயேஷா கித்மினி பெர்னாந்து | 11.03.2019-12.03.2019 |
இந்த நிதியத்திற்கு கீழ்காணும் விதத்தில் நிதி வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

- இந்த அதிகார சபையின் பயன்பாட்டிற்காக பாராளுமன்றத்தினால் அவ்வப்பொழுது ஒதுக்கப்படலாம் எனும் அத்தகைய சகல நிதிகளும், மற்றும்
- இலங்கையினுள்ள மூலங்களிலிருந்து அல்லது இலங்கைக்கு வெளியாலுள்ள அத்தகைய மூலங்களிலிருந்து நன்கொடையாக, சன்மானமாக, வாரிசாக மற்றும் மானியங்களாக இந்த அதிகார சபைக்கு கிடைக்கலாம் என அத்தகைய சகல நிதித் தொகைகளும்

குறித்த சட்டத்தின் கீழ் தனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள கடமைகளையும் மற்றும் தொழிற்பாடுகளையும் நிறைவேற்றுவதில் இந்த அதிகார சபைக்கு ஏற்படும் செலவு அதிகார சபையின் நிதியிலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

✓பாதுகாப்பு நிதியம்

பாதுகாப்பு நிதியத்திற்கு கீழ்காணும் விதத்தில் நிதி வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

- அத்தகைய நிதியின் நிமித்தம் பாராளுமன்றத்தினால் ஒதுக்கப்படலாம் எனும் சகல நிதித் தொகைகளும்
- ஏதாவது உள்நாட்டு அல்லது வெளிநாட்டு மூலங்களிலிருந்து ஏதாவது சன்மானமாக, நன்கொடையாக, பங்களிப்பாக, வாரிசாக மற்றும் மானியமாக இந்த பாதுகாப்பு நிதிக்கு அனுப்பப்படுதல் வேண்டும் என இந்த அதிகார சபைக்கு கிடைக்கலாம் எனும் அத்தகைய சகல நிதித் தொகைகளும், மற்றும்
-குறித்த சட்டத்தின் 28 ஆம் பிரிவினது (1) (அ) (ii) உப பிரிவின் கீழ் நீதிமன்றத்தால் அனுப்பிவைக்கப்படும் அத்தகைய சகல நிதிகளும்

குறித்த சட்டத்தின் 29 ஆம் பிரிவினது (4)(அ) மற்றும் (ஆ) ஆகிய உப பிரிவுகளின் கீழ் கொடுப்பனவுக்கு என முகாமைத்துவ சபையினால்

தீர்மானிக்கப்படலாம் எனும் தொகை இந்த பாதுகாப்பு நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

### 3.9. வருமானங்கள் இனங்காணல்

#### 3.9.1 வருமான இனங்காணல்

குறித்த சட்டத்தின் 28 ஆம் பிரிவினது (1) (அ) (ii) உப பிரிவின் கீழ் ஒரு நீதிமன்றத்தால் அனுப்பப்படும் அத்தகைய சகல நிதிகளும் கிடைப்பனவு அடிப்படையில் கணக்கீடு செய்யப்படுகின்ற அதே வேளையில் வட்டியும் மற்றும் ஏனைய எல்லா வருமானமும் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்படுகின்றன.

#### 3.9.2 செலவினம்

இந்த அதிகார சபையை நிருவகிப்பதில் ஏற்பட்ட சகல வகையான செலவுகளும் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளன. அதிகார சபையின் சம்பாத்திய ஆற்றலை தொடர்ந்து பேணும் அல்லது அதிகரிக்கும் பொருட்டு ஒரு நிரந்தர தன்மையில் சொத்தை கொள்வனவு செய்யும், விரிவடையச் செய்யும் அல்லது மேம்படுத்தும் விடயத்தில் ஏற்பட்ட சகல செலவுகளும் மூலதன செலவுகளாக கருதப்பட்டுள்ளன.

### 3.10. ஒத்தீட்டுத் தகவல்கள்

தேவையானவிடத்து, நடைமுறையாண்டின் சமர்ப்பணத்தை உறுதிசெய்யும் பொருட்டு ஒத்தீட்டுப் புள்ளி விபரங்கள் மீளொழுங்கமைக்கப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளன.

### 3.11. ஐந்தொகைத் திகதிற்கு பின்னர் எழும் நிகழ்வுகள்

ஐந்தொகைத் திகதிற்கு பின்னர் எழுந்த சகல பொருண்மையான நிகழ்வுகளும் கருத்திற் கொள்ளப்பட்டு, நிதிக் கூற்றுக்கான அந்தந்த குறிப்புக்களில் பொருத்தமான சீராக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டுள்ளன.

### 3.12. பொறுப்புக்களும் இடைநேர்வுகளும்

இடைநேர்வுகள் என்பது கடந்த கால நிகழ்விலிருந்து எழும் சாத்தியமான சொத்துக்கள் அல்லது கடப்பாடுகள் ஆகும். இதனை குறிப்பிட முடியாத எதிர்கால நிகழ்வுகளின் நிகழ் அல்லது நிகழா தன்மையின் அடிப்படையில் மாத்திரம் உறுதிசெய்து கொள்ள முடியும். இவை அதிகார சபையின் கட்டுப்பாட்டுக்கு அப்பால்பட்டவையாகும்.

## 1. மானியங்கள் கணக்கீடு

✓**அரச மானிய**ங்கள்

(அ) சொத்துக்களின் கொள்வனவுக்கான அரசாங்க மானியங்கள் அத்தகைய சொத்துக்களின் பயனுள்ள பாவனை காலங்களின் மீது வருமானமாக இனங்காணப்படுகின்றன.

(ஆ) கிடைத்த ஏனைய மானியங்கள் மற்றும் அவற்றின் மீதான செலவுகள் இலாப நட்ட கணக்கில் கூட்டிணைக்கப்பட்டுள்ளன.

## 1. முதலீடு

அதிகார சபையின் நிதியத்திற்கு வரவுவைக்க வேண்டிய முதலீட்டு நிதிகள் வங்கியில் நடைமுறை, சேமிப்பு, அல்லது வைப்பு கணக்குகளை திறந்து பேணுவதனூடாக உகந்த மற்றும் பாதுகாப்பான ஒரு முறையில் வரவுவைக்க வேண்டும் என குறித்த சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (அ) உப பிரிவு விபரிக்கின்றது.

குறித்த சட்டத்திற்கு இணங்க, அதிகார சபையின் நிதியத்திற்கு வரவுவைக்க வேண்டிய நிதிகள் பொருத்தமான பாதுகாப்பான சாதனங்களில் முதலீடு செய்யப்பட வேண்டும். அந்த முதலீடுகள் ஆகுசெலவு அடிப்படையில் கணக்கீடு செய்யப்படும். அத்தகைய முதலீடுகளிலிருந்து ஈட்டப்படுகின்ற வருமானம் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்படும்.

# குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை

## 2019 ஆம் ஆண்டு திசம்பர்மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிலை பற்றிய கூற்று

| | குறிப்பு இலக்கம் | 2019<br>ரூ. | 2018<br>ரூ. |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | |
| கையிருப்பிலும் வங்கியிலும் உள்ள காசு | **08** | 4,749,968 | 555,800 |
| பற்றுக்கள் | **09** | 30,000 | 15,000 |
| ஏனைய சொத்துக்கள் | **10** | 1,578,031 | 1,159,720 |
| **மொத்த நடைமுறை சொத்துக்கள்** | | **6,357,999** | **1,730,520** |
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | |
| **முதலீடு** | **11** | 2,163,300 | |
| சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் | **12** | 19,657,940 | 15,482,742 |
| **மொத்த நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | **21,821,240** | **15,482,742** |
| **மொத்த சொத்துக்கள்** | | **28,179,239** | **17,213,262** |
| கழிக்குக: | | | |
| **பொறுப்புக்கள்** | | | |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | **13** | **1.238,653** | **246,514** |
| **மொத்த நடைமுறை பொறுப்புக்கள்** | | **1.238,653** | **246,514** |
| **தேறிய நடைமுறை சொத்துக்கள்** | | **5,119,347** | **1,484,005** |
| **நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | **14** | **1,033,949** | **440,404** |
| **மொத்த பொறுப்புக்கள்** | | **2,272,601** | **686,919** |
| **மொத்த தேறிய சொத்துக்கள்** | | **25,906,638** | **16,526,343** |
| **பின்வரும் விதத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள நிதியிடுகை** | | | |
| திரட்டு நிதி | **15** | 566 | 487,801 |

| | | | |
|---|---|---|---|
| **அதிகார சபையின் பாதுகாப்பு நிதி** | **16** | 3,963,140 | 555,8 00 |
| அரச மானியங்கள் | **17** | 14,806,284 | 8,139,968 |
| UNDP மானியங்கள் | **18** | 6,105,648 | 7,342,774 |
| | | **25,906,638** | **16,526,343** |

"1- 5 இலக்கம் வரையான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் 10 முதல் 15 வரையான பக்கங்களில் காணப்படும் குறிப்புகள், இந்த நிதிக் கூற்றின் இன்றியமையாத பாகங்களாகும். இந்த நிதிக் கூற்றுக்கள் இந்த அதிகார சபையின் முகாமைத்துவ சபை சார்பாக நீதி, மனித உரிமைகள் மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன."

ஒப்பமிடப்பட்டது:

ஜி.டீ.ஆர். பெரேரா
பணிப்பாளர் ( நிதி )

உதயகுமார அமரசிங்க
பணிப்பாளர் நாயகம்

அங்கீகரிக்கப்பட்டது
:

ஜே.ஜே. ரத்னசிறி
செயலாளர்
நீதி, மனித உரிமைகள்
மற்றும் சட்ட
மறுசீரமைப்பு
அமைச்சு

## குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை
## 2019 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி சார்ந்த செயலாற்றுகை பற்றிய கூற்று

| | குறிப்பு இலக்கம் | 2019 ரூ. | 2018 ரூ. |
|---|---|---|---|
| **வருமானம்** | **1** | | |
| மானியங்கள் | **1.1** | 38, 964,130 | 31,181,249 |
| ஏனைய வருமானம் | **1.2** | 18,749,310 | 23,080,227 |
| **மொத்த வருமானம்** | | **57,713,440** | **54,261,476** |
| **இயக்க செயற்பாடுகள் சார்ந்த செலவுகள்** | | | |
| தனியாள் வேதனாதிகள் | **2** | 28,155,264 | 22,659,856 |
| பிரயாண செலவுகள் | **3** | 242,668 | 310,004 |
| வழங்கல்களும் நுகர்வுப் பொருட்களும் | **4** | 4,193,854 | 2,900,051 |
| பராமரிப்பு சார்ந்த செலவுகள் | **5** | 3,458,610 | 3,295,380 |
| ஒப்பந்த சேவைகள் | **6** | 18,400,264 | 23,514,465 |
| தேய்மானம் | **7** | 2,719,015 | 1,093,920 |
| **மொத்த செலவுகள்** | | **57,169,675** | **53,773,675** |
| **குறித்த காலப் பகுதிற்கான மிகை / (பற்றாக்குறை)** | | **543,765** | **487,801** |

# குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை
## 2019 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று

| | | 2019 | 2018 |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| **இயக்க சார் செயற்பாடுகளிலிருந்து வரும் காசுப் பாய்ச்சல்கள்** | | | |
| குறித்த ஆண்டிற்கான மிகை / (பற்றாக்குறை) | | 543,765 | 487,801 |
| கழிக்குக: | நிலையான சொத்துக்கள் விற்பனையிலிருந்து கிடைத்த இலாபம் | - | - |
| | மூலதன மானியங்கள் கழிவு | (18,500,810) | (1,093,920) |
| கூட்டுக: | குறித்த ஆண்டிற்கான தேய்மான கழிவு | 2,719,015 | 1,093,920 |
| | பணிக்கொடைக்கான நிதியேற்பாடு | 593,544 | 440,404 |
| **தொழிற்படு மூலதனங்களுக்கு முன்னருள்ள இயக்க சார் செயற்பாடுகள் சார்ந்த மிகை / (பற்றாக்குறை)** | | **(14,644,486)** | **928,205** |
| | பொருட்கள் இருப்புகளில் அதிகரிப்பு | (365,876) | (1,159,720) |
| | வர்த்தக மற்றும் ஏனைய கிடைப்பனவுகளில் அதிகரிப்பு (குறைவு) | (52,435) | - |
| | முற்கொடுப்பனவுகளின் அதிகரிப்பு | (15,000) | (15,000) |
| | திரண்ட செலவுகளிலும் செலுத்த வேண்டிய தொகைகளிலும் ஏற்பட்ட அதிகரிப்பு | 992,138 | 246,514 |
| | குறித்த ஆண்டு காலப் பகுதியினுள் செலுத்திய பணிக்கொடைகள் | - | - |
| | | **(558,827)** | **(928,205)** |
| **இயக்க சார் செயற்பாடுகளிலிருந்து வரும் தேறிய காசுப் பாய்ச்சல்கள்** | | **(14,085,658)** | **-** |
| **முதலீடு சார்ந்த செயற்பாடுகளிலிருந்து வரும் காசுப் பாய்ச்சல்கள்** | | | |
| | நிலையான சொத்துக்கள் கொள்வனவு | (6,894,213) | (13,915,369) |
| | நிலையான சொத்துக்கள் விற்பனையிலிருந்து கிடைக்கும் நிதிகள் முதலீடு | - | - |
| | **முதலீடுகள்** | (2,163,300) | - |
| **முதலீடு சார்ந்த செயற்பாடுகளிலிருந்து வரும் தேறிய காசுப் பாய்ச்சல்கள்** | | **(9,057,513)** | **(13,915,369)** |
| **நிதி சார்ந்த செயற்பாடுகளிலிருந்து வரும் காசுப் பாய்ச்சல்கள்** | | | |
| | உள்ளக நிதிகளுக்கான தேறிய கிடைப்பனவுகள் | 3,407,340 | 555,800 |
| | மூலதன மானியங்கள் | 23,930,000 | 13,915,369 |
| **நிதி சார்ந்த செயற்பாடுகளிலிருந்து வரும் தேறிய காசுப் பாய்ச்சல்கள்** | | **27,337,340** | **14,471,169** |
| **பயன்படுத்திய தேறிய நிதி அளவு** | | **4,194,168** | **555,800** |
| **2019. 01.01 ஆம் திகதிற்கான காசும் காசு ஒப்புரவுகளும்** | | **555,800** | - |
| **2019. 12.31 ஆம் திகதிற்கான காசும் காசு ஒப்புரவுகளும்** | | **4,749,968** | **555,800** |

## குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை

## 2019 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான திரட்டு நிதிய மாற்றங்கள் பற்றிய கூற்று

| | நிதி (ரூ.) | மானியங்கள் (ரூ.) | திரட்டு நிதியும் மற்றும் ஒதுக்கீடும் (ரூ.) | மொத்தம் (ரூ.) |
|---|---|---|---|---|
| 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆம் திகதிற்கான நிலுவை | - | 2,661,292 | - | 2,661,292 |
| குறித்த ஆண்டு காலப் பகுதியியிலுள்ள அறவீடுகள் | - | 40,939,171 | 487,801 | 41,426,972 |
| குறித்த ஆண்டு காலப் பகுதியிலுள்ள மாற்றல்கள் | 555,800 | (28,117,722) | - | (27,561,922) |
| 2018 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதிற்கான நிலுவை | **555,800** | **15,482,742** | **487,801** | **16,526,343** |
| 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதிற்கான நிலுவை | 555,800 | 15,482,742 | 487,801 | 16,526,343 |
| குறித்த ஆண்டு காலப் பகுதியிலுள்ள அறவீடுகள் | - | 23,930,000 | 543,765 | 24,473,765 |
| குறித்த ஆண்டு காலப் பகுதியிலுள்ள மாற்றல்கள் | 3,407,340 | (18,500,810) | - | (15,093,470) |
| 2019 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதிற்கான நிலுவை | **3,963,140** | **20,911,932** | **1,031,566** | **25,906,638** |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

| குறிப்பு இலக்கம்: 01<br>வருமானம் | 2019<br>(ரூ.) | 2018<br>(ரூ.) |
|---|---|---|
| **1.1 - மானியங்கள்** | | |
| **மீண்டெழும் அரச மானியங்கள்** | | |
| குறித்த ஆண்டு காலப் பகுதியினுள் கிடைத்த கிடைப்பனவுகள் | 38,964,130 | 32,600,000 |
| குறித்த ஆண்டு காலப் பகுதியினுள் செலுத்திய மீள்கொடுப்பனவுகள் | - | (1,418,751) |
| | 38,964,130 | 31,181,249 |
| **1.2 - ஏனைய வருமானங்கள்** | | |
| ஏனைய வருமானம் | | |
| குறித்த ஆண்டு காலப் பகுதியினுள் கிடைத்த கிடைப்பனவுகள் | 248,500 | 115,680 |
| குறித்த ஆண்டு காலப் பகுதியினுள் செலுத்திய மீள்கொடுப்பனவுகள் | - | (115,680) |
| | 248,500 | - |
| பிற்போடப்பட்ட வருமானங்கள் | | |
| பிற்போடப்பட்ட வருமானம் - அரச மானிங்கள் | 4,063,684 | 3,650,932 |
| பிற்போடப்பட்ட வருமானம் - UNDP மானியங்கள் | 14,437,126 | 19,429,295 |
| | 18,500,810 | 23,080,227 |
| **மொத்த வருமானம்** | **57,713,440** | **54,261,477** |

**2019 ஆம் ஆண்டிற்கு மீண்டெழும் செலவினங்களின் நிமித்தம் அதிகார சபைக்கு 60,000,000.00 ரூபா தொகையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எனினும், 2019 ஆம் ஆண்டிற்கு மீண்டெழும் செலவினங்களுக்காக 43,000,000.00 ரூபா தொகை மாத்திரம் தேவைப்பட்டது. எஞ்சிய 17, 000, 000.00 ரூபா நிதி தொகை, நிரல் அமைச்சுக்கு மீண்டும் ஒதுக்கப்பட்டது.

| **குறிப்பு இலக்கம்: 02**<br>**செலவுகள்** | **2019**<br>**(ரூ.)** | **2018**<br>**(ரூ.)** |
|---|---|---|
| **தனியாள் வேதனாதிகள்** | | |
| சம்பளங்களும் வேதனாதிகளும் | 14,269,541 | 9,950,484 |
| ஊழியர் சேமலாப நிதி | 2,095,156 | 1,581,254 |
| ஊழியர் நம்பிக்கை நிதி | 523,789 | 395,314 |
| மேலதிக நேர மற்றும் விடுமுறை நாள் கொடுப்பனவுகள் | 1,156,276 | 767,749 |
| பணிக்கொடைகள் | 593,544 | 440,404 |
| பதில் கடமைகளுக்கான கொடுப்பனவுகள் | 52,210 | 339,608 |
| பிரயாண கொடுப்பனவுகள் | 1,833,871 | 1,600,000 |
| எரிபொருள் கொடுப்பனவுகள் | 1,135,290 | 1,116,210 |
| வாழ்க்கை செலவு கொடுப்பனவுகள் | 3,055,516 | 2,424,500 |
| சீராக்கல் கொடுப்பனவுகள் | 391,921 | 1,000,807 |
| தொழில் சார் கட்டணங்கள் | 288,000 | 251,526 |
| முகாமைத்துவ சபைக்கான கொடுப்பனவுகள் | 1,828,000 | 1,790,000 |
| ஏனைய கொடுப்பனவுகள் | 832,151 | 1,002,000 |
| பயிற்சி சார்ந்த கொடுப்பனவுகள் | 100,000 | |
| **மொத்தம்** | **28,155,264** | **22,659,856** |

| **குறிப்பு இலக்கம்: 03**<br>**பிரயாண செலவுகள்** | **2019**<br>**(ரூ.)** | **2018**<br>**(ரூ.)** |
|---|---|---|
| உள்நாட்டு பிரயாணங்கள் | 214,217 | 91,478 |
| வெளிநாட்டு பிரயாணங்கள் | 28,451 | 218,526 |
| **மொத்தம்** | **242,668** | **310,004** |

| **குறிப்பு இலக்கம்: 04**<br>**வழங்கல்களும் மற்றும் நுகர்வுப் பொருட்களும்** | **2019**<br>**(ரூ.)** | **2018**<br>**(ரூ.)** |
|---|---|---|
| அச்சீடும் காகிதாதிகளும் | 1,297,649 | 737,743 |
| எரிபொருட்களும் உராய்வுநீக்கி எண்ணெய்களும் | 1,483,234 | 853,234 |
| சீருடைகள் | 36,000 | 36,000 |
| பொழுதுபோக்கு சார்ந்த செயற்பாடுகள் | 552,912 | 318,903 |
| வியாபார விளம்பரம் | 736,362 | 646,070 |
| செய்திப் பத்திரிகைகள் | 14,520 | 15,600 |
| ஏனைய வழங்கல்கள் | 73,177 | 292,501 |
| **மொத்தம்** | **4,193,854** | **2,900,051** |

| குறிப்பு இலக்கம்: 05<br>**பராமரிப்பு** | **2019<br>(ரூ.)** | **2018<br>(ரூ.)** |
|---|---:|---:|
| பராமரிப்பு சார்ந்த செலவுகள் - வாகனங்கள் | 2,282,640 | 1,501,580 |
| பராமரிப்பு சார்ந்த செலவுகள் - பொறித் தொகுதிகள், இயந்திராதிகள் | 841,708 | 211,280 |
| பராமரிப்பு சார்ந்த செலவுகள் - கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்கள் | 334,262 | 1,582,520 |
| **மொத்தம்** | **3,458,610** | **3,295,380** |

| **குறிப்பு இலக்கம்: 06<br>ஒப்பந்த சேவைகள்** | **2019<br>(ரூ.)** | **2018<br>(ரூ.)** |
|---|---:|---:|
| போக்குவரத்து | | |
| தொலைத்தொடர்பு கட்டணங்கள் | 24,548 | 18,172 |
| தபால் கட்டணங்கள் | 764,853 | 671,686 |
| வங்கி கட்டணங்கள் | 74,210 | 28,600 |
| மின்சாரம் மற்றும் தண்ணீர் கட்டணங்கள் | 8,511 | - |
| துப்புரவேற்பாடு சார்ந்த கட்டணங்கள் | - | 16,732 |
| ஏனைய சேவைகள் - அரசாங்கத்தின் விழிப்பூட்டும் | 970,507 | 766,153 |
| நிகழ்ச்சித் திட்டங்கள் | 2,869,192 | 3,280,909 |
| ஏனைய சேவைகள் - UNDP விழிப்பூட்டும் நிகழ்ச்சித் | 12,912,603 | 18,705,398 |
| திட்டங்கள் | 744,941 | - |
| ஏனைய சேவைகள் - கணக்காய்வு கட்டணங்கள் | 30,899 | 26,815 |
| ஏனைய சேவைகள் - பிற | | |
| **மொத்தம்** | **18,400,264** | **23,514,465** |

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

| **குறிப்பு இலக்கம்: 07<br>தேய்மானம்** | **2019<br>(ரூ.)** | **2018<br>(ரூ.)** |
|---|---:|---:|
| கட்டிடங்கள், நிர்மாணங்கள் புனர்நிர்மாணம் - அரச மானியங்கள் | 81,685 | 32,432 |
| தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் - அரச மானியங்கள் | 753,979 | 327,366 |
| தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் - UNDP மானியங்கள் | 341,507 | 161,865 |
| கணனிகளும் துணைப் பாகங்களும் - அரச மானியங்கள் | 299,524 | 6,060 |
| கணனிகளும் துணைப் பாகங்களும் - UNDP மானியங்கள் | 1,162,900 | 562,032 |
| மென்பாகங்கள் அபிவிருத்தி - அரச மானியங்கள் | 59,305 | 4,165 |
| ஏனையவை - UNDP மானியங்கள் | 20,116 | - |
| **மொத்தம்** | **2,719,015** | **1,093,920** |

| **குறிப்பு இலக்கம்: 08**<br>**கையிருப்பிலும் மற்றும் வங்கியிலும் உள்ள காசு** | **2019**<br>**(ரூ.)** | **2018**<br>**(ரூ.)** |
|---|---|---|
| இலங்கை வங்கி - C/A-81479591 | 2,927,563 | - |
| இலங்கை வங்கி - அதிகார சபை நிதி C/A-81624249 | 1,822,405 | 555,800 |
| சிறு நிதிகள் | - | - |
| **மொத்தம்** | **4,749,968** | **555,800.00** |

| **குறிப்பு இலக்கம்: 09**<br>**வைப்புக்கள்** | **2019**<br>**(ரூ.)** | **2018**<br>**(ரூ.)** |
|---|---|---|
| மீளளிக்கப்படும் வைப்புக்கள் - எரிபொருள் | 30,000 | 15,000 |
| **மொத்தம்** | **30,000** | **15,000.00** |

| **குறிப்பு இலக்கம்: 10**<br>**ஏனைய சொத்துக்கள்** | **2019**<br>**(ரூ.)** | **2018**<br>**(ரூ.)** |
|---|---|---|
| கிடைக்க வேண்டிய வட்டி - நிலையான வைப்புக்கள் | 52,435 | **-** |
| இருப்பு | 1,525,596 | 1,159,720 |
| **மொத்தம்** | **1,578,031** | **1,159,720** |

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

| **குறிப்பு இலக்கம்: 11**<br>**முதலீடு** | **2019**<br>**(ரூ.)** | **2018**<br>**(ரூ.)** |
|---|---|---|
| முதலீடு - நிலையான வைப்புக்கள் | 2,163,300 | - |
| **மொத்தம்** | **2,163,300** | **-** |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை

**குறிப்பு இலக்கம்: 12**

## 2019 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிலையான சொத்துக்கள்

| விபரங்கள் | கட்டிடங்கள் (ரூ.) | வாகனங்கள் (ரூ.) | தளபாடங்களும் மற்றும் அலுவலக உபகரணங்களும் | கணனிகள் (ரூ.) | பொறித் தொகுதிகளும் மற்றும் இயந்திராதிகளும் | மென் பாகங்கள் (ரூ.) | ஏனையவை (ரூ.) | காணிகள் (ரூ.) | மொத்தம் (ரூ.) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆம் திகதிற்கான ஆகுசெலவு** | 1,991,278 | **-** | **9,179,997** | 5,283,600 | **-** | 190,026 | **-** | **-** | **16,644,901** |
| சேர்வுகள் | 294,600 | - | 3,642,016 | 2,175,000 | - | 495,200 | 287,397 | - | **6,894,213** |
| அகற்றல்கள் | - | - | - | - | - | - | - | - | **-** |
| **2019 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதிற்கான ஆகுசெலவு** | **2,285,878** | **-** | **12,822,013** | **7,458,600** | **-** | **685,226** | 287,397 | **-** | **23,539,114** |
| **2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆம் திகதிற்கான திரண்ட நிலுவை** | **32,432** | **-** | **557,469** | 568,092 | **-** | 4,165 | **-** | **-** | **1,162,158** |
| தேய்மானம் | 81,685 | - | 1,095,486 | 1,462,424 | - | 59,305 | 20,116 | - | **2,719,015** |
| அகற்றல்கள் | - | - | - | - | - | - | - | - | **-** |
| **2019 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதிற்கான திரண்ட தேய்மானம்** | **114,117** | **-** | **1,652,955** | **2,030,516** | **-** | **63,470** | 20,116 | **-** | **3,881,174** |
| **2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆம் திகதிற்கு பதிவழிக்கப் பட்டுள்ள பெறுமானம்** | **1,958,846** | **-** | **8,622,528** | **4,715,508** | **-** | **185,861** | **-** | **-** | **15,482,742** |
| **2019 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதிற்கு பதிவழிக்கப் பட்டுள்ள பெறுமானம்** | **2,171,761** | **-** | **11,169,058** | **5,428,084** | **-** | **621,756** | **267,281** | **-** | **19,657,940** |

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

| **குறிப்பு இலக்கம்: 13**<br>**ஏனைய பொறுப்புக்கள்** | **2019**<br>**ரூ.** | **2018**<br>**ரூ.** |
|---|---|---|
| திரண்ட செலவு - ஏனைய கொடுப்பனவுகள் | - | 100,000 |
| திரண்ட செலவு - மேலதிக நேர கொடுப்பனவுகள் | 76,966 | 65,198 |
| திரண்ட செலவு - உள்நாட்டு பிரயாணங்கள் | 26,850 | 10,400 |
| திரண்ட செலவு - எரிபொருட்கள் | 114,324 | 5,000 |
| திரண்ட செலவு - தொலைத்தொடர்புகள் | 63,640 | 55,756 |
| திரண்ட செலவு - விடுமுறை நாள் கொடுப்பனவுகள் | 21,866 | 3,441 |
| திரண்ட செலவு - சம்பளங்களும் மற்றும் வேதனாதிகளும் | - | 6,719 |
| திரண்ட செலவு - செய்திப் பத்திரிகைகள் | 2,400 | - |
| திரண்ட செலவு - வாகனங்களின் பழுதுபார்ப்புகள் | 13,927 | - |
| திரண்ட செலவு - துப்புரவேற்பாடு சார்ந்த வசதிகள் | 82,858 | - |
| திரண்ட செலவு - போக்குவரத்து | 1,200 | - |
| திரண்ட செலவு - ஏனைய | 3,000 | - |
| மீளளிக்கப்படும் வைப்பு தொகைகள் | 86,680 | - |
| நிதியேற்பாடு - கணக்காய்வு கட்டணங்கள் | 744,941 | - |
| **மொத்தம்** | **1,238,653** | **246,514** |

| **குறிப்பு இலக்கம் 14**<br>**நடைமுறையல்லாத பற்றுக்கள் / பொறுப்புக்கள்** | **2019**<br>**ரூ.** | **2018**<br>**ரூ.** |
|---|---|---|
| செலுத்த வேண்டியுள்ள பணிக்கொடைகள் (குறிப்பு இலக்கம்: 14 (1)) | 1,033,949 | **440,404** |
| **மொத்தம்** | 1,033,949 | **440,404** |

| **குறிப்பு இலக்கம்: 14 (1)**<br>**பணிக்கொடை** | **2019**<br>**ரூ.** | **2018**<br>**ரூ.** |
|---|---|---|
| குறித்த ஆண்டு ஆரம்பத்திலுள்ள நிலுவை | 440,404 | - |
| குறித்த ஆண்டிற்கான அறவீடுகள் | 593,544 | 440,404 |
| குறித்த ஆண்டு காலப் பகுதியினுள் செலுத்திய பணிக்கொடை நிதி | - | - |
| **மொத்தம்** | 1,033,948 | 440,404 |

| **குறிப்பு இலக்கம்: 15**<br>**திரட்டு நிதியம்** | **2019**<br>**ரூ.** | **2018**<br>**ரூ.** |
|---|---|---|
| குறித்த ஆண்டு ஆரம்பத்திலுள்ள நிதி | 487,801 | - |
| குறித்த ஆண்டிற்கான மிகை /பற்றாக்குறை | 543,765 | 487,801 |
| **மொத்தம்** | **1,031,566** | **487,801** |

| **குறிப்பு இலக்கம்: 16**<br>**அதிகார சபையின் பாதுகாப்பு நிதியம்** | **2019**<br>**ரூ.** | **2018**<br>**ரூ.** |
|---|---|---|
| குறித்த ஆண்டு ஆரம்பத்திலுள்ள நிலுவை | 555,800 | - |
| குறித்த ஆண்டு காலப் பகுதியிலுள்ள மாற்றல்கள் | 3,407,340 | 555,800 |
| **மொத்தம்** | **3,963,140** | **555,800** |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

| **குறிப்பு இலக்கம்: 17**<br>**அரச மூலதன மானியங்கள்** | **2019**<br>**(ரூ.)** | **2018**<br>**(ரூ.)** |
|---|---|---|
| குறித்த ஆண்டு ஆரம்பத்திலுள்ள நிலுவை | 8,139,968 | 2,661,292 |
| குறித்த ஆண்டு காலப் பகுதியினுள் கிடைத்த கிடைப்பனவுகள் | 10,730,000 | 11,212,000 |
| குறித்த ஆண்டு காலப் பகுதியினுள் செலுத்திய மீள்கொடுப்பனவுகள் | - | (2,082,393) |
| குறித்த ஆண்டு காலப் பகுதியிலுள்ள பிற்போடப்பட்ட மானியம் | (4,063,684) | (3,650,932) |
| **மொத்தம்** | **14,806,284** | **8,139,968** |

| **குறிப்பு இலக்கம்: 18**<br>**ஐக்கிய நாடுகள் அமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலதனம் சார்ந்த மானியங்கள்** | **2019**<br>**ரூ.** | **2018**<br>**ரூ.** |
|---|---|---|
| ஆரம்ப நிலுவை | 7,342,774 | - |
| ஐக்கிய நாடுகள் அமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கிடைத்த நிலையான சொத்துக்கள் மானியம் - குறித்த ஆண்டு காலப் பகுதியில் கிடைத்த கிடைப்பனவுகள் | 287,397 | 8,066,671 |
| ஐக்கிய நாடுகள் அமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கிடைத்த மூலதனம் சார்ந்த மானியங்கள் - குறித்த ஆண்டு காலப் பகுதியினுள் கிடைத்த கிடைப்பனவுகள் | 12,912,603 | 21,660,500 |
| குறித்த ஆண்டு காலப் பகுதியினுள் செலுத்திய மீள்கொடுப்பனவுகள் | - | (2,955,102) |
| குறித்த ஆண்டு காலப் பகுதியிலுள்ள பிற்போடப்பட்ட மானியம் | (14,437,126) | (19,429,295) |
| **மொத்தம்** | **6,105,648** | **7,342,774** |

## குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை 2019 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதிகார சபையின் பாதுகாப்பு நிதிய செலவினங்கள் பற்றிய கூற்று

| விபரம் | மொத்தம் (ரூ.) |
|---|---|
| <u>நீதிமன்றங்களில் இருந்து கிடைத்த வருமானம்</u><br><br>மொத்த தண்டப் பணங்கள் | <br><br>3,357,225 |
| **முழு மொத்தம் (அ)** | **3,357,225** |
| **கூட்டுக: வட்டி வருமானம்** | 52,435 |
| **மொத்த வட்டி (ஆ)** | **52,435** |
| **கழிக்குக: செலவுகள்**<br>வங்கிக் கட்டணங்கள்<br>நஷ்டாஈடுகள்<br>பிடித்து வைத்தல் வரி | <br>(100)<br>(2,220)<br>- |
| **மொத்த செலவுகள் ( இ )** | **(2,320)** |
| | |
| **எஞ்சிய தேறிய தொகை (அ) + (ஆ) + ( இ )** | **3,407,340** |

# குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை
# ஐக்கிய நாடுகள் அமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கான செலவின அறிக்கை
# காலம்: 2019.01.01 ஆம் திகதி முதல் 2019.12.31 ஆம் திகதி வரை

| **வருடாந்த இலக்குகள் அடங்கலாக எதிர்பார்த்த நன்மைகளும் மற்றும் சுட்டிகளும்** | **திட்டமிடப்பட்டிருந்த செயற்பாடுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ள பெறுபேறுகளை அடைந்து கொள்ளும் பொருட்டு குறித்த ஆண்டு காலப் பகுதியினுள் மேற்கொள்ளப்பட்டிருந்த செயற்பாடுகள் அடங்கிய பட்டியல்** | **திட்டமிடப்பட்டிருந்த வரவுசெலவு - 2019** | | **கொடுப்பனவுகளும் மற்றும் செலவுகளும் (ரூ.)** | | |
|---|---|---|---|---|---|---|
| | | **வரவுசெலவுத் திட்டம் பற்றிய விபரம்** | **நிதி** | **கொடுப்பனவுகள்** | **செலவுகள்** | **எஞ்சிய நிதி** |
| | **செயற்படுத்திய நிகழ்ச்சித் திட்டங்கள்** | | **(ரூ.)** | **(ரூ.)** | **(ரூ.)** | **(ரூ.)** |
| | குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் உதவுவதற்கும் மற்றும் பாதுகாப்பதற்குமான பொலிஸ் பிரிவின் உத்தியோகத்தர்களை விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துதல் (குறித்த சட்டத்தின் 13 (இ) பிரிவு | | 1,210,000 | 1,210,000 | 1,210,000 | - |
| | குறித்த சட்டத்தை செயற்படுத்துவதில் சம்பந்தப்படும் இலங்கை நீதிபதிகள் சங்கம், பொலிஸ் மாஅதிபரின் திணைக்களம், சட்ட மாஅதிபரின் திணைக்களம், நீதிமன்ற மருத்துவ அதிகாரிகள் சங்கம், இலங்கை சட்டத்தரனிகள் சங்கம், சிறைச்சாலைகள் திணைக்களம், மகளிர் மற்றும் சிறுவர் விவகாரங்கள் அமைச்சு, சட்டம் மற்றும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு, நீதி அமைச்சு, சட்ட உதவி ஆணைக்குழு போன்ற நிறுவனங்களின் பொருத்தமான உத்தியோகத்தர்களையும் மற்றும் நீதிமன்ற மருத்துவ அதிகாரிகளையும் பயிற்றுவிக்கும் மற்றும் விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துதல் (குறித்த சட்டத்தின் 13 (இ) பிரிவு) | | 11,810,000 | 11,810,000 | 11,702,603 | 107,397 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | இந்த தேசிய அதிகார சபைக்கு தேவையான உபகரணங்களை பெற்றுக் கொடுத்தல், குற்றத்தால் பலியானவர்களும் மற்றும் சாட்சியாளர்களும் விடுக்கும் வேண்டுகோள்கள் மற்றும் செய்யும் முறைப்பாடுகள் பற்றிய முன்னேற்றத்தை மதிப்பிடும் பொருட்டு ஒரு தானியக்க சம்பவங்கள் முகாமைத்துவ தரவுகள் களஞ்சிய வசதியை அமைத்தல், தேசிய அதிகார சபைக்கு குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பது பற்றிய தரவுகள் அடங்கிய ஒரு நூலகத்தையும் மற்றும் ஒரு ஆராய்ச்சி நிலையத்தையும் தாபித்தல் | | 180,000 | 180,000 | 287,397 | (107,397) |
| | **மொத்த எண்ணிக்கை** | | **13,200,000** | **13,200,000** | **13,200,000** | **-** |

## குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை

## முதலீட்டு விபரப் பட்டியல் - காலம்: 2019.01.01 ஆம் திகதி முதல் 2019.12.31 ஆம் திகதி வரை

| முதலிடப் படும் தரப்பு /வங்கி | சான் றிதழ் இலக்கம் | முதலீடு | | | | | கால வரை யறை | வரு டாந்த வட்டி வீதம் | கிடைக்க வேண்டிய மொத்த வட்டி (ரூ.) | கால முதிர்ச்சி பெறுமானம் (ரூ.) | மொத்த பிடித்து வைத்தல் வரி - 5% வீதத்தில் (ரூ.) | கிடைக்க வேண்டிய தேறிய வட்டி (ரூ) | கால முதிர்ச் சியின் போதுள்ள தேறிய வட்டி (ரூ.) | கிடைக்க வேண்டிய வட்டி (ரூ.) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | திகதி | | புதிய (கிடைத்த வட்டி) | முகப் பெறு மானம் (பழைய) | முதலீட்டு நிதி (ரூ.) | | | | | | | | 2019 | 2020 | மொத்தம் |
| | | முதலீடு | முதிர்ச்சி | | | | | | | | | | | | | |
| இ.வ. | 84941500 | 2019 ஒற்றோ பர் மாதம் 03 | 2020 ஒற்றோபர் மாதம் 05 | | | 2,163,300 | 12 மாதங்கள் | 9.83% | 214,400 | 2,377,700 | - | 214,400 | 2,377,700 | 52,435 | 161,965 | 214,400 |
| | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | - | - | - | - | - | | | - |
| | | | | | | - | | | - | - | - | - | - | | | - |
| | | | | **-** | **-** | **2,163,300** | **-** | | **214,400** | **2,377,700** | **-** | **214,400** | **2,377,700** | **52,435** | **161,965** | **214,400** |

எனது இல. JPA/B/NAPVCW/FA/01/19/35 திகதி :- 2020 ஆகஸ்ட் 12

பணிப்பாளர் நாயகம்
குற்றங்கள் சாட்சிகளில் பாதிக்கப்பட்டோர் பாதுகாப்பிற்கான தேசிய அதிகாரசபை.

**குற்றங்கள் சாட்சிகளில் பாதிக்கப்பட்டோர் பாதுகாப்பிற்கான தேசிய அதிகாரசபையின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக்கான தேசிய அதிகாரசபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

அதிகாரசபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

---

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் அதிகாரசபையின் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்கொன்றாகும்.

அதிகாரசபை நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக அதிகாரசபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாகபோதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக அதிகாரசபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் ஈடுபாட்டை தீர்மானிக்கப்படுகின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புடைய தரப்பினர் தெரியப்படுத்தப்பட்டனர்.

## 2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கணக்காய்விற்காக தேவையான சகல தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் எனது பரிசோதனையின் போது வெளிப்படுதப்பட்ட வகையில் உரிய நிதி அறிக்கைகள் நிறுவகத்தினால் பேணப்பட்டிருப்பதாகவும்.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(III) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன எனவும்.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்கியுள்ளது எனவும்

பின்பற்றப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் அதிகாரசபையின் ஆளுகை சபை உறுப்பினர் நிறுவகத்துடன் தொடர்புபட்டு ஏதேனும் உடன்படிக்கை தொடர்பாக நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் பொதுவான வியாபார நிலைமை அல்லாமல் தொடர்புட்டுள்ளதாக

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கீழே காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் தவிர ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் இணங்கியொழுகாதுள்ளமையை

| சட்டங்கள், விதிகள் / ஏற்பாடுகளுடனான தொடர்பு | விபரங்கள் |
|---|---|
| (அ) 2015 இன் 4 ஆம் இலக்க குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக்கான சட்டத்தின் 29 ஆம் பிரிவு | அதிகாரசபையிடம் பாதுகாப்பு நிதியமொன்று இருக்க வேண்டியதுடன் நிதியத்தின் வருமானம் மற்றும் செலவினம் மற்றும் சொத்துக்கள் மற்றம் பொறுப்புக்கள் தொடர்பாக முறையான கணக்கு வைக்கப்பட வேண்டிய போதிலும் பாதுகாப்பு நிதியததின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அதிகாரசபையின் ஐந்தொகையில் உள்ளடக்கி காண்பிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 1648(ஈ) | மீளாய்வாண்டிற்குரியயதாக அதிகாரசபையின் வானங்கள் தொடர்பாக பொது 268(அ) மாதிரி படிவத்தில் எழுதப்பட்ட பிரயாணம் தொடர்பான மாதாந்த பொழிப்பின் மூலப் பிரதியுடன் அந்தந்த மாதத்தின் நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் 2020 யூலை 20 ஆந் திகதி வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்க வில்லை. |

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் அதிகாரசபை அதன் அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்க செயலாற்றியிருக்காதமையை குறிப்பிடுதல்.

  2015 இன் 4 ஆம் இலக்க குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக்கான சட்டத்தின் IV ஆம் பிரிவின் 12 ஆமு உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்காகவும் முகாமைத்துவம் செய்வதற்காக முகாமைத்துவ சபைக்கு கையளிக்கப்பட வேண்டிய போதிலும் 2019 நவம்பர 19 ஆந் திகதி முதல் முகாமைத்துவ சபையொன்று நியமிக்கப்படாதிருந்ததுடன் அதன் காரணமாக நிதிக்கூற்றுக்களில் பொறுப்பைக் கையேற்றல் தொடர்பாக சிக்கலான நிலைமையொன்று காணப்பட்டது.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் அதிகாரசபையின் வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்க பெறுகை செய்து பயன்படுத்தியிருக்கவில்லையெனவும்

  (அ) விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் போட்டி விலைகோரல் மேறகொளளல் மேற்கொள்ளாமல் பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் (BMICH) நடாத்துவதற்கு 19/2019 ஆம் இலக்க பணிப்பாளர் சபை பத்திரத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அதிகாரசபையால் கொழும்பு மாவட்டத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்ததுடன் முதலாவது கூறுவிலை கோரிய

சந்தர்ப்பத்தில் குறைந்த விலை சமர்ப்பித்திருந்த இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தில் (SLIDA) நடாத்தியிருந்தால் அதிகாரசபைக்கு ரூபா 3,094,569 தொகையை சேமித்திருக்க கூடியதாக இருந்திருக்கும்.

(ஆ) அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 9.8(ஈ) உப பிரிவின் பிரகாரம் இலத்திரனியல் ஊடகங்களில் கூறுவிலை சமர்ப்பிக்க அனுமதி வழங்கப்படாது என குறிப்பிடப்பட்டிருந்த போதும் ரூபா 183,015 ஆன கொள்வவிற்காக தனியார் புத்தக நிலையமொன்றிலிருந்து 2018 ஒக்தோபர் 10 ஆந் திகதி மற்றும் 06 சந்தர்ப்பங்களில் ரூபா 4,704,819 கூட்டுத்தொகையான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்திற்காக பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தின் (BMICH) மின்னஞ்சல் (Gmail) மூலம் சமர்ப்பிக்கப்பட்ட விலைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தன.

## 3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்

(அ) பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கம் போது நிறுவகத்தின் செயல்நடவடிக்கை திட்டத்தினை அடிப்படையில் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளுக்காக நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையால் மீளாய்வாண்டில் மிகை மதிப்பீடு தயாரிக்கப்பட்டமையால் எஞ்சிய ரூபா 17 மில்லியனான பணம் அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2016, 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் அதிகாரசபைக்கு கிடைத்த முறைப்பாடுகளின் முறையே 12, 49, 86 மற்றும் 252 என மொத்தம் 399 ஆக இருந்தன. நான்கு ஆண்டுகளில் பூர்த்தி செய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 153 ஆக இருந்ததுடன் அது முறையே 8, 37, 47 மற்றும் 61 ஆக இருந்தன. அந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை சதவீதமாக 66, 75, 55, மற்றும் 24 ஆக இருந்தன. அதிகாரசபைபயால் இதுவரை பாதுகாப்பு பிரிவு அல்லது உதவி பிரிவு ஸ்தாபிக்கப்படாமல் இருந்ததுடன் இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக்கான உதவி மற்றும் பாதுகாப்பு பிரிவிற்கு 81 முறைப்பாடுகள் அனுப்பிவைக்கப்பட்டிருந்தன.

(இ) உரிய செயற்பாட்டிற்கு போதியளவு தொகையொன்றை செயற்பாடொன்றிற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் வழங்கப்பட வேண்டிய போதிலும் 26 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட முற்பணம் ரூபா 785,675 ஆகவும் செலவினம் ரூபா 414,894 ஆகவும் இருந்தமையால் ரூபா 370,781 தொகை அளவினை மிகைத்து வழங்கப்பட்டிருந்தது. அது 25 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரை காணப்பட்டது.

(ஈ) பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.11.3 பிரிவின் பிரகாரம் 2 பெறுகை சந்தர்ப்பங்களில் கூறுவிலை மதிப்பீடு பொழிப்பு அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 9.8(அ) உப பிரிவின் பிரகாரம் பெறுகை நிறுவனம் விரும்பினால் பொதுவான விளம்பரச் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக இணையத்தள மூலமாக வெளியிட முடியாத போதும் வாசிகசாலையின் புதத்கங்களை கொள்வனவு செய்யும் போது இலத்திரனியல் ஊடகங்களில் மின்னஞ்சல் (Gmail) மூலம் கூறுவிலைகள் கோரப்பட்டமையால் மேற்படி பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு புறம்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஊ) அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 55 ஆக காணப்பட்ட போதிலும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் 38 ஆக இருந்தனர். நிறுவகத்தின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் நேரடியாக தாக்கம் செலுத்தும் 14 பதவிகள் வெற்றிடங்களாக காணப்பட்டன.

ஒப்பம் : டபிள்யூ.பீ.சீ. விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி